ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(மலர் – 21) May 2008

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

அடியேன் உரை

இந்த மாதம் மிகவும் புண்ணியம் செய்த மாதம் – காரணம் “நம் இராமாநுசன்” திருஅவதாரம் செய்தருளின மாதம் இதுவே ஆகும். அந்தப் புண்ணிய நாள் 09.05.2008 ஆகும். இந்த சுபநாளில் நாம் எம்பெருமானாரை இடைவிடாது மனதில் நிறுத்தி, அவரது கடாக்ஷம் கிட்டவேண்டும் என்று ப்ரார்த்திப்போமாக.

எம்பெருமானாரைப் பற்றிய பெரியதிருமுடியடைவுக் குறிப்புகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. இதன்படி காணும்போது, உடையவர் ஏறத்தாழ 15000 பேர்களுக்கு மேலானவர்களை நியமித்தபடி இருந்துள்ளார் என்று அறிய முடிகிறது. ஆனால் நம்மில் பலர் 10-15 பேர்களை நியமிப்பதைக் கொண்டு “நான் மேனேஜர்” என்று கர்வம் கொண்டு நிற்கிறோம், எம்பெருமானாரையே ஏறத்தாழ மறந்துவிட்ட நிலையையே இது போன்ற கர்வம் காட்டுகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

அடுத்து இந்த மாதத்தில் உடையவரின் த்ரிதண்டம் என்றும், சடாரிநிலை என்றும் போற்றப்படும் முதலியாண்டானின் திருநக்ஷத்ரமும் வருகிறது.

மேலும் ஒரு முக்கியமான நாள் – இதே மாதத்தில் ஆதிசங்கரபகவத்பாதாளின் திருநக்ஷத்ரமும் (08.05.2008) வருகிறது. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யம், கீதா பாஷ்யம் என்று பலவும் இயற்றி வைஷ்ணவத்திற்கு பெரும் தொண்டாற்றியவர் இந்த ஆசார்யர் என்பதை மறுக்க இயலாது.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம்

ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்

உட்பொதிவு

1. ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தர பாகம்)

2. ஸ்ரீபாஷ்யம்

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

4. முமுக்ஷுப்படி

5. திருவெழுகூற்றிருக்கை

6. திருமாலை

7. எம்பெருமானார்

8. முதலியாண்டான்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

ஸ்ரீரங்கராஜஸ்தவம் – உத்தர பாகம்

(பகுதி – 7)

71. ஆகண்டவாரிபர மந்தர மேக தேசயம்
பீதாம்பரம் கமல லோசந பஞ்சஹேதி
ப்ரஹ்ம ஸ்தநந்தயம் அயாசத தேவகீ த்வாம்
ஸ்ரீரங்ககாந்த! ஸுதகாம்யதி கா அபர ஏவம்

பொருள் – (இரண்டு ச்லோகங்கள் க்ருஷ்ணாவதாரம்) ஸ்ரீரங்கநாதா! கழுத்தளவு மழைநீர் கொண்டதும், அந்தப் பாரம் தாங்காமல் மெதுவாகச் செல்வதும் ஆகிய கார்கால மேகம் போன்ற நிறம்; பீதாம்பரத்தை அணிந்த நிலை; தாமரை போன்ற அழகான திருக்கண்கள்; பஞ்ச ஆயுதங்களுடன் கூடிய நிலை – இப்படிப்பட்ட பரப்ரஹ்மான உன்னையே தனது குழந்தையாக, தேவகீ வேண்டி நின்றாள். இவளை விடுத்து வேறு யார் இவ்விதம் புத்திர பாக்கியம் வேண்டுவார்கள்?

72. சைல: அக்நிச்ச ஜலாம்பபூவ முநய: மூடாம்பபூவு: ஜடா:
ப்ராஜ்ஞாமாஸு: அகா: ஸகோபம் அம்ருதாமாஸு: மஹா ஆசீவிஷா:
கோவ்யாக்ரா: ஸஹஜாம் பபூவு: அபரே து அந்யாம்பபூவு: ப்ரபோ!
த்வம் தேஷு அந்யதமாம் பபூவித பவத் வேணு க்வண உந்மாதநே

பொருள் – திருவரங்கனே! கண்ணனாக நின்ற உனது வேணுகானத்தினால் ஏற்பட்ட மயக்கத்தில் நிகழ்ந்தது என்ன? மலைகளும், நெருப்பும் நீர் போன்று உருகி நின்றன. மதி நிறைந்த முனிவர்கள் மூடர்களாக நின்றனர். ஜடங்களாக நின்ற மரங்கள் அனைத்தும், இடையர்களுடன் சேர்ந்து கொண்டு பெரும் ஞானிகளாக மாறின. கொடிய விஷம் உடைய நாகங்கள் அனைத்தும் அமிர்தம் சுரக்கக் கூடியவை ஆயின. மாடுகளும், புலிகளும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பழகி நின்றன. இப்படியாகப் பலவும் வேறுபட்டவையாக நின்றன. இப்படியாக நின்ற அவையுள் நீயும் வேறுபட்டு நின்றாய்.

73. கல்கிதநு: தரணீம் லகயிஷ்யந் கலிகலுஷாந் விலுநாஸி புரா த்வம்
ரங்கநிகேத! லுநீஹி லுநீஹி இதி அகிலம் அருந்துதம் அத்ய லுநீஹி

பொருள் – (கல்கி அவதாரத்தைக் கூறுகிறார்) திருவரங்கப் பெரியகோயிலை இருப்பிடமாகக் கொண்டு வாசம் செய்பவனே! கல்கியாக அவதாரம் எடுத்து, இந்தக் கலிகாலத்தில் உள்ள பாவம் செய்தவர்களை அடியுடன் அழிக்கப் போகிறாய். இப்படியாக நீ இந்தப் பூமியின் பாரத்தைக் குறைக்கப் போகிறாய். அத்தனை நாள் காத்து நிற்காமல் (கலிகாலம் முடியும்வரை), இன்றே இங்குள்ள கொடியவர்களை அழித்துவிட்டு, "இவற்றை அழித்தேன், அழித்தேன்", என்று கூற வேண்டும்.

74. ஆஸ்தாம் தே குணராசிவத் குண பரீவாஹ ஆத்மாநம் ஜந்மநாம்
ஸங்க்யா பௌம நிகேத நேஷு அபி குடீ குஞ்சேஷு ரங்கேச்வர!
அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீந அகில ஆத்ம ஸ்திதி:
ப்ரீணீஷே ஹ்ருதயாலுபி: தவ ததச் சீலாத் ஜடீபூயதே

பொருள் – திருவரங்கனே! உன்னுடைய குணங்களின் எண்ணிக்கை எல்லையற்று உள்ளது. அந்தக் குணங்களை வெளிப்படுத்தும் விதமாக உள்ள உனது திருஅவதாரங்களின் எண்ணிக்கையும் எல்லையற்று உள்ளது. இவை ஒரு புறம் இருக்கட்டும் (இவற்றை நான் பெரிதாக எண்ணவில்லை). ஆனால் – இந்தப் பூமியில் உள்ள கோயில்கள், வீடுகள், ஆச்ரமங்கள் ஆகியவற்றில் ஆராதனை செய்யும்படியான அர்ச்சா விக்ரஹமாக, அனைத்தையும் பொறுத்துக் கொள்பவனாக, அர்ச்சகரால் ஸமர்பிக்கப்படும் அனைத்து நிலைகளையும் ஏற்றுக் கொள்பவனாக மகிழ்வுடன் உள்ளாயே (இதுவல்லவா சிறப்பு)! இப்படியாக உள்ள உனது சீல குணத்தில் ஈடுபடாதவர்களே இல்லை, அனைவரும் மயங்குகின்றனர்.

75. ஸ்ரீமத் வ்யோம நஸீம வாக்மநஸயோ: ஸர்வே அவதாரா: க்வசித்
காலே விச்வஜநீநம் ஏதத் இதி தீ: ஸ்ரீரங்கதாமந்யத
ஆர்த்த ஸ்வாகதிகை: க்ருபா கலுஷிதை: ஆலோகிதை: ஆர்த்ரயந்
விச்வ த்ராண விமர்சந ஸ்கலிதயா நித்ராஸி ஜாகர்யயா

பொருள் – பெரியபெருமாளே! நீ உனது திருவுள்ளத்தில், "பரமபதம் என்பது வாக்காலும் மனதாலும் எளிதாக எட்ட முடியாததாக உள்ளது. ராம க்ருஷ்ண விபவ அவதாரங்கள் எப்போதோ ஒரு காலத்தில் நடந்து முடிந்துவிட்டன. நாம் இப்போது உள்ள அர்ச்சாவதாரமே இந்த உலகத்திற்கு நன்மை அளிக்கவல்லது", என்று எண்ணினாய் போலும். அதனால்தான், திருவரங்கப் பெரியகோயிலில் - உன் மீது

மிகவும் அன்பு கொண்ட அடியார்களைக் கண்டு திருக்கண்களால் குசலம் விசாரிப்பதும், அவர்கள் மீது கொண்ட கருணை காரணமாக அவர்கள் நிலை கண்டு இரங்கி அவர்களது குற்றங்களையும் குணங்களையும் காணாமல் இருப்பதும் ஆகிய உனது கடாக்ஷம் மூலம் அவர்களின் துன்பங்களை நீக்கிக் குளிரவைத்தபடி உள்ளாய். இப்படியாக எப்போதும் இந்த உலகின் ரக்ஷணத்தை எண்ணியபடி, யோகநித்ரையாக உள்ளபோதிலும் விழிப்பு நிலையான ஜாக்ரத் நிலையில் உள்ளபடி, திருக்கண்வளர்கிறாய்.

76. ஸர்க்காப்யாஸ விசாலயா நிஜதியா ஜாநந் அநந்தே சயம்
பாரத்யா ஸஹதர்மசாரரதயா ஸ்வாதீந ஸங்கீர்த்தந:
கல்பாந் ஏவ பஹூந் கமண்டலு கலத் கங்காப்லுத: அபூஜயத்
ப்ரஹ்மா த்வாம் முகலோசந அஞ்ஜலிபுடை: பத்மை: இவ ஆவர்ஜிதை:

பொருள் – ஸ்ரீரங்கநாதா! அகஸ்த்திய முனிவரின் கமண்டலத்தில் இருந்து பெருகி ஓடிய காவேரியில் நான்முகன் நீராடினான் (அல்லது தனது கமண்டலத்தில் இருந்து பெருகிய கங்கையில் நீராடினான்). தனது ஸ்ருஷ்டியால் வந்த மலர்ச்சியால், பல கல்ப காலங்கள் அனைவருக்கும் எஜமானான உன்னை அவன் த்யானித்தபடி இருந்தான். தன்னுடைய மனைவியான ஸரஸ்வதி மூலம் பெற்ற ஸங்கீர்த்தன ஞானம் கொண்டு புருஷஸூக்தம் முதலானவையால் உன்னைத் துதித்தான். இதனால் பெற்ற தாமரை போன்ற கண்கள், முகங்கள் மற்றும் அஞ்ஜலி எனக் குவித்த கரங்களால் உன்னை வணங்கியபடி நின்றான்.

விளக்கம் – இந்த ச்லோகம் தொடங்கி மூன்று ச்லோகங்களில் பெரியபெருமாள் ஸத்யலோகத்தில் இருந்து இங்கு வந்தமை குறித்துக் கூறுகிறார். முதலில் ப்ரம்மன் ஸத்யலோகத்தில் ஆராதனை செய்தமை பற்றி இந்தச் ச்லோகத்தில் கூறினார்.

77. மநுகுல மஹீபால வ்யாநம்ர மௌலி பரம்பரா
மணிமகரிகாரோசி: நீராஜித அங்க்ரி ஸரோருஹ:
ஸ்வயம் அத விபோ! ஸ்வேந ஸ்ரீரங்கதாமநி மைதிலீ
ரமண வபுஷா ஸ்வ அர்ஹாணி ஆராதநாநி அஸி லம்பித

பொருள் – பெரியபெருமாளே! மநுகுலத்தில் உதித்த சக்ரவர்த்திகள் உனது திருவடிகளில் வணங்கியபடி இருந்தனர். அவ்விதம் அவர்கள் வணங்கியபோது, அவர்களின் க்ரீடங்களில் உள்ள மீன் வடிவத்தில் காணப்படும் இரத்தினக்கற்களின் ஒளியானது உனது தாமரை போன்ற திருவடிகளுக்கு ஆலத்தி கழிப்பது போன்று இருந்தன. அதன் பின்னர் சீதையின் நாயகனான ஸ்ரீராமன் தனது திருக்கரங்களால் உனக்குரிய ஆராதனைகளை, ஸ்ரீரங்கவிமானத்தில்

செய்தபடி இருந்தான். இப்படியாக உனது ஆராதனையை உன்னாலேயே நீ அடைந்தாய்.

விளக்கம் – இந்த ச்லோகத்தில் ஸத்யலோகத்தில் இருந்து ஸ்ரீரங்கவிமானம் அயோத்திக்கு வந்தமை பற்றிக் கூறினார். அதனை இராமன் ஆராதனை செய்தது பற்றியும் விளக்கினார். ஸ்ரீரங்கநாதனே இராமனாக அவதரித்ததை விளக்கும் விதமாக - உனது ஆராதனையை உன்னாலேயே நீ அடைந்தாய் – என்று கூறியது காண்க.

78. மநு அந்வவாயே த்ருஹிணே ச தந்யே விபீஷணேந ஏவ புரஸ்க்ருதேந
குணை: தரித்ராணம் இமம் ஜநம் த்வம் மத்யேஸரித் நாத! ஸுகாகரோஷி

பொருள் – மநுகுலம், உயர்ந்த ப்ரம்மன் ஆகியோர் இருக்கும்போது, அவர்களை விட்டுப் பிரிந்து, உனது திருவுள்ளத்தினால் விபீஷணன் மூலமாக திருக்காவேரியின் கரையை அடைந்தாய். இவர்களைப் போன்று எந்தவிதமான குணங்களும் இல்லாத அடியேன் போன்றவர்களை நீ மகிழ்விக்கிறாய்.

விளக்கம் – இக்ஷ்வாகு குலத்தில் இருந்து விபீஷணனுக்கு ஸ்ரீரங்கவிமானம் இராமனால் வழங்கப்பட்டது. அந்த விமானம் விபீஷணனால், பெரியபெருமாளின் திருவுள்ளத்திற்கு ஏற்ப திருவரங்கத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. இதனை வியந்து போற்றுகிறார்.

79. தேஜ: பரம் தத் ஸவிது: வரேண்யம் தாம்நா பரேண ஆப்ரணகாத் ஸுவர்ணம்
த்வாம் புண்டரீக ஈக்ஷணம் ஆமநந்தி ஸ்ரீரங்கநாதம் தம் உபாஸிஷீய

பொருள் – அழகியமணவாளா! சூரியனுக்கு மேன்மை அளிக்கக்கூடியதும், அந்தச் சூரியனை உபாஸிக்க ஏதுவாக உள்ளதும் ஆகிய அவனது தேஜஸ்ஸாக உன்னையே வேதங்கள் ஓதுகின்றன. மேலும், திருமுடி தொடக்கமாக திருநகக் கண்கள் வரை உன்னை ஸ்வர்ணமயமாகவும், அழகான தாமரை போன்ற கண்கள் கொண்டவனாகவும் ஓதுகின்றன. இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனான உன்னை நான் உபாஸிப்பேனாக.

விளக்கம் – ய ஏஷ: அந்தராதித்யே ஹிரண்யமய: புருஷோ – சூரியனின் உள்ளே ஸ்வர்ணமயமாக உள்ள புருஷன் யாரோ; கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணி –

தாமரை போன்ற அழகான கண்கள் கொண்டவன் – என்று உபநிஷத்துக்கள் முழங்கியதை இங்கு கூறுகிறார்.

80. ஆத்மா அஸ்ய கந்து: பரிதஸ்துஷ: ச மித்ரஸ்ய சக்ஷு: வருணஸ்ய ச அக்நே:
லக்ஷ்ம்யா ஸஹ ஔத்பத்திக காட பந்தம் பச்யேம ரங்கே சரதச் சதம் த்வாம்

பொருள் – பெரியபெருமாளே! கண்களில் புலப்படும் விலங்கு மற்றும் தாவர வஸ்துக்களுக்கு நீயே உயிராக உள்ளாய். சூரியன், வருணன், அக்நி போன்றவர்களுக்குக் கண்ணாக நீயே உள்ளாய். ஸ்ரீரங்கநாச்சியாருடன் எப்போதும் இடைவிடாது கூடி இருக்கின்றாய். இப்படிப்பட்ட உன்னைத் திருவரங்கத்திலே நூறாண்டுகள் இடைவிடாமல் வணங்கி நிற்போம்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 21)

அதிகரணம் – 6 - ஸமாநாதிகரணம்

ஆராயப்படும் விஷயம் – சுக்லயஜுர்வேதத்தில் உள்ள அக்னிரஹஸ்யம் மற்றும் ப்ருஹத் ஆரண்யகம் என்னும் இரண்டு உபநிஷத்துக்களில் சாண்டில்ய வித்யை என்பது ஓதப்பட்டுள்ளது. இவை இரண்டிற்கும் இடையே ரூபத்தில் வேறுபாடு இல்லாத காரணத்தினால், இரண்டும் ஒன்றே என நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-19 ஸமாந ஏவம் ச அபேதாத்

பொருள் - குணங்கள் ஒன்றாக உள்ளதால், வேறுபடாத காரணத்தினால் ஒன்றே ஆகும்.

விஷயம் – வாஜஸநேயகத்தில் உள்ள அக்னிரஹஸ்யத்தில் சாண்டில்ய வித்யை படிக்கப்பட்டது. இது – ஸத்யம் ப்ரஹ்ம இதி உபாஸீத அதகலு க்ரதும யோயம் புருஷ: - ஸத்யத்தையே ப்ரஹ்மமாக உபாஸிக்க வேண்டும் – என்று தொடங்கப்பட்டது. இந்தப் பகுதியானது - ஸ ஆத்மாநம் உபாஸீத மநோமயம் ப்ராணசரீரம் பாரூபம் ஸத்யஸங்கல்பம் ஆகாசாத்மாநம் – அவன் தூய்மையான மனம் மூலம் அறியத்தக்கவனாக, ப்ராணனைச் சரீரமாகக் கொண்டவனாக, ஜ்யோதிரூபமாக, ஆகாயத்திற்கு ஆத்மாவாக உள்ளவனாக, ஸத்யஸங்கல்பனாக உள்ள பரம்பொருளை உபாஸனை செய்யக்கடவன் – என்று முடிக்கப்பட்டது. இது போன்று ப்ருஹத் உபநிஷத்தில் (5-6-1) – மநோமயோ அயம் புருஷ: பாஸ்ஸத்ய: தஸ்மிந் அந்தர் ஹ்ருதயே யதா வ்ரீஹிர்வா யவோ வா ஸ ஏஷ ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாநஸ் ஸர்வஸ்யாதிபதி: ஸர்வம் இதம் ப்ரசாஸ்தி யதிதம் கிம் ச – இந்தப் புருஷன் தூய்மையான மனம் கொண்டு அறியத்தக்கவன்; தானாகவே ப்ரகாசமாக உள்ளவன்; மாற்றங்கள் அடையாதவன்; இதயத்தில் நெல்

அளவில் உள்ளவன்; அனைவரையும் தன் வயப்படுத்தியுள்ளவன்; அனைவரையும் அனைத்தையும் நியமித்தபடி உள்ளவன் – என்று கூறப்பட்டது.

சந்தேகம் - இந்த இரண்டு வித்யைகளும் வெவ்வேறு அல்லது ஒன்றா?

பூர்வபக்ஷம் – இந்த இரண்டு வித்யைகளிலும் ஸம்யோகம் (பலன்களில் உள்ள தொடர்பு), சோதநா (உபாஸனை விதிமுறைகள்), ஆக்யா (பெயர்) ஆகியவை ஒன்றாகவே உள்ளன. ஆனால் அனைவரையும் தன்வயப்படுத்தியவன் (விசித்வம்) முதலான தன்மைகளில் வேறுபாடு உள்ளது. ஆகவே இரண்டு வித்யைகளும் வெவ்வேறு என்றே ஆகிறது.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல, ஸமாந ஏவம் – பொதுவாக உள்ளதால் – என்று கூறுகிறோம். தூய்மையான மனம் கொண்டு அறியத்தக்கவன், ஒளி பொருந்தியவன், ஸத்யஸங்கல்பன் – போன்ற தன்மைகள் இரண்டு உபநிஷத்துக்களிலும் உள்ள அக்னி ரஹஸ்யத்தில் பொதுவாகவே கூறப்பட்டன. ப்ருஹத் உபநிஷத்தில் மட்டும் அதிகமாக படிக்கப்பட்ட – அனைத்தையும் தன் வயப்படுத்துபவன் – போன்ற தன்மைகள், ஸத்யஸங்கல்பம் – என்ற தன்மையிலேயே அடங்கிவிடும். ஆகவே இரண்டு வித்யைகளுக்கும் இடையே வேறுபாடு இல்லை, இரு வித்யைகளும் ஒன்றே என்றாகிறது.

ஸமாநாதிகரணம் ஸம்பூர்ணம்

அதிகரணம் – 7 – ஸம்பந்தாதிகரணம்

ஆராயப்படும் விஷயம் – ஆதித்யனை இருப்பிடமாகக் கொண்ட ப்ரஹ்மம் என்பதன் மூலம் அந்தராதித்ய வித்யை என்பதும், கண்களை இருப்பிடமாகக் கொண்ட ப்ரஹ்மம் என்பதன் மூலம் அக்ஷிவித்யை என்பதும் கொள்ளவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-20 ஸம்பந்தாத் ஏவம் அந்யத்ர அபி

பொருள் - இரண்டு இடங்களில் உள்ள தொடர்பு வேறு இடத்திலும் கூறப்படுவதால்.

விஷயம் - ப்ருஹத் உபநிஷத்தில் (5-5-1) – ஸத்யம் ப்ரஹ்ம – என்று தொடங்கப்பட்டு, (5-5-2) – தத்யத் ஸத்யம் அஸௌ ஸ ஆதித்யோ ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷோயச்சாயம் தக்ஷிணே அக்ஷிந் – ஸத்யம் என்று கூறப்படும் இந்தப் ப்ரஹ்மமே ஆதித்ய மண்டலத்தில் உள்ளவன் ஆவான், இவனே சூரியனிலும் வலது கண்ணிலும் உள்ளான் – என்று கூறப்பட்டு, அவனே அங்கு உபாஸிக்கத்தக்கவன் என்றும் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவன் சூர்ய மண்டலத்தில் உள்ளான் என்பதை – தஸ்யோபநிஷத: - அவனது பெயர் அஹ: - என்பதன் மூலம் கூறியது. மேலும் அவன் வலது கண்ணில் உள்ளான் என்பதை – தஸ்யோபநிஷதஹம் – அவனது பெயர் அஹம் – என்பதன் மூலம் கூறியது.

சந்தேகம் – இந்த இரண்டு பெயர்களும் அந்தந்த இடத்தில் உள்ள ப்ரஹ்மத்திற்கு உரியதா அல்லது இருவருக்குமே இரு பெயர்களும் உரியவையா?

பூர்வபக்ஷம் – வ்யாஹ்ருதிகளை சரீரமாகக் கொண்டதும், ஸத்யம் எனப்படுவதும் ஆகிய ஒரே ப்ரஹ்மமே இரண்டு இடங்களிலும் (சூர்யமண்டலம், வலது கண்) உள்ளது. ஆகவே உபாஸிக்கப்படும் வஸ்து இரண்டிலும் ஒன்றாகவே உள்ளதால், இரண்டு வித்யைகளுக்கு இடையே ரூப பேதம் இல்லை. எனவே இரண்டு வித்யைகளும் ஒன்றே என்று கொள்ளப்பட வேண்டும்.

முன்னர் படிக்கப்பட்ட சாண்டில்ய வித்யையில் மநோமயத்வம் போன்ற குணங்களைக் கொண்ட ஒரே ப்ரஹ்மம் இரண்டு இடத்திலும் உபாஸிக்கப்படுவதால், இரண்டு வித்யைகளும் ஒன்றே எனவும், வசித்வம் போன்ற தன்மைகள் இரண்டு இடங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் எனவும் நிரூபிக்கப்பட்டது. இது போன்றே ஸத்யம் எனப்படும் ஒரே ப்ரஹ்மமே சூரிய மண்டலத்திலும், வலது கண்ணிலும் உள்ளதாகக் கொள்ளவேண்டும். ஆக இரு வித்யைகளும் ஒன்றே ஆகும்.

குறிப்பு – இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள சூத்திரம் ஆகும்.

3-3-21 ந வா விசேஷாத்

பொருள் – ரூபம் வேறுபடுவதால் ஒன்றல்ல.

ஸித்தாந்தம் – (கடந்த சூத்திரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) உபாஸிக்கப்படும் வஸ்துவின் ரூபம் வேறுபடுவதால், இரண்டு வித்யைகளும் ஒன்றல்ல. ப்ரஹ்மம் ஒன்று என்றாலும், ஓர் இடத்தில் ஆதித்யனாகிய இடத்துடனும், மற்றோர் இடத்தில் வலது கண் என்னும் இடத்துடனும் தொடர்பு கொண்டுள்ளதாக உபாஸிக்கப்படுகிறது. ஆகவே இரண்டு இடங்களிலும் வேறுபாடு உள்ளதால், ரூப வேறுபாடும் ஏற்படுகிறது. இப்படியாக உபாஸிக்கப்படும் பொருள் இருக்கின்ற இடம் வேறுபடுதல் என்பது போல சாண்டில்ய வித்யையில் இருப்பிட வேறுபாடு காணப்படுவதில்லை. அங்குள்ள இரண்டு வித்யைகளிலுமே, ப்ரஹ்மம் இதயத்தில் உள்ளதாகக் கூறப்பட்டது. ஆகவே அஹ:, அஹம் என்னும் இரு நாமங்களும் வெவ்வேறு வித்யைகளுக்கு உரியதே ஆகும்.

3-3-22 தர்சயதி ச

பொருள் – ச்ருதியும் இப்படியே கூறுகிறது.

ஸித்தாந்தம் – (சூத்திரம் 3-3-20ல் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) இந்த இரண்டு வித்யைகளும் கூறப்பட்ட பகுதியில் சாந்தோக்ய உபநிஷத் (1-7-5) – தஸ்யை தஸ்ய தத் ஏவ ரூபம் யதமுஷ்ய ரூபம் – ஆதித்யனில் உள்ள ப்ரஹ்மத்திற்கு எது ரூபமோ, வலது கண்ணில் உள்ள ப்ரஹ்மத்திற்கு அதுவே ரூபம் - என்று கூறியது. இப்படியாக ஒன்றில் உள்ள திருமேனி மற்றதற்கும் பொருந்தும் என்று தனியாகக் கூறப்பட்டது. இரண்டு வித்யைகளும் ஒன்றே எனும்போது, இப்படித் திருமேனியைப் பற்றித் தனியே கூறவேண்டிய அவசியம் இல்லை. ஆக இரண்டு வித்யைகளும் ஒன்றல்ல என்றாகிறது.

ஸம்பந்தாதிகரணம் ஸம்பூர்ணம்

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 21)

நாராயணனே உயர்ந்த தெய்வம் என்பது ரஹஸ்யத்ரயத்தில் உள்ள இடங்கள்

இப்பரதேவதா பாரமார்த்தம் திருமந்திரத்தில் ப்ரதமாக்ஷரத்திலும் நாராயண சப்தத்திலும், த்வயத்தில் ஸவிசேஷணங்களான நாராயண சப்தங்களிலும், சரமச்லோகத்தில் “மாம், அஹம்” என்கிற சப்தங்களிலும் அநுஸந்தேயம்.

விளக்கம் – நாராயணனே உயர்ந்த தெய்வம் என்னும் விஷயமானது திருமந்த்ரத்தில் உள்ள முதல் எழுத்தான “அ” என்பதிலும் (ஓம் என்பதில் உள்ள அ), நாராயண என்பதிலும் காணலாம். இதனை த்வய மந்த்ரத்தில் உள்ள ஸ்ரீ என்பதுடன் கூடிய நாராயண என்பதில் காணலாம். சரமச்லோகத்தில் – நான் – என்னும் பதத்தில் காணலாம்.

நாராயணனே உயர்ந்த தெய்வம் என்று எண்ணாதவனுக்கு அவனைத் தவிர தன்னைக் காக்க யாரும் இல்லை என்னும் எண்ணம் ஏற்படாது

இத்தேவதா விசேஷ நிச்சயமுடையவனுக்கல்லது “கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே” என்றும், “களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்”, என்றும், “ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன் யான்” என்றும், “தருதுயரம் தடாயேல்” என்கிற திருமொழி முதலானவற்றிலும் சொல்லும் அநந்ய சரணத்வாவஸ்தை கிடையாது.

விளக்கம் – நாராயணன் மட்டுமே தங்களைக் காக்கவல்லவன் என்னும் நிலையானது ஆழ்வார்களின் பாசுரங்களில் பின்வருமாறு வெளிப்படுகின்றன:

- திருவாய்மொழி (2-2-1) - கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே – கண்ணன் அல்லாமல் ரக்ஷகன் வேறு யாரும் இல்லை.

- திருவாய்மொழி (5-8-8) - களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் – நீ என் துன்பங்களை நீக்கினாலும் சரி, நீக்காவிட்டாலும் சரி, உன்னை அல்லாமல் அவற்றைப் போக்கவல்லவர் யாரும் இல்லை.

- திருவாய்மொழி (10-10-3) - ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன் யான் – உன்னை அல்லாமல் எனது ஆத்மாவுக்குப் பற்றுக்கொம்பு கிடையாது.

- பெருமாள் திருமொழி (5-1) - தருதுயரம் தடாயேல் – என் கர்மங்களுக்கு ஏற்றபடி எனக்கு உண்டாகும் துன்பங்களை நீ தடுக்காவிட்டால்....

இப்படிப்பட்ட நிலையானது நாராயணனே உயர்ந்த தெய்வம் என்று கொள்ளாத வர்களுக்கு ஏற்படாது.

அவனுக்கு மட்டுமே அடிமையாக உள்ளதும், மற்ற தேவதைகளைக் கைவிடுவதும்

இந்தப் பரதேவதாபாரமார்த்தத்தைத் திருமந்த்ரத்திலே கண்டு ததீயபர்யந்தமாக தேவதாந்தர த்யாகமும் ததீய பர்யந்தமாக பகவச்சேஷத்வமும் ப்ரதிஷ்ட்திமானபடியை “மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க் கடிமை” என்கிற பாட்டிலே ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணின ஆழ்வாரருளிச் செய்தார்.

விளக்கம் – ஸர்வேச்வரனிடமிருந்து நேரடியாகவே உபதேசம் பெற்ற திருமங்கை யாழ்வார், இவனைப் பற்றிய உண்மையை திருமந்த்ரம் மூலமாக உணர்ந்தார். இப்படியாக இவர் மற்ற தேவதைகளைக் கைவிட்டும், இவனுக்கு மட்டுமே அடிமையாக உள்ள நிலையையும் அடைந்தார். இதனை பெரியதிருமொழியில் (8-10-3) - மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க் கடிமை – உன்னைத் தவிர வேறு ஒரு தெய்வம் உள்ளது என்று

கூறுபவர்களுடன் நான் வசிக்கமாட்டேன்; உனது அடியார்களுக்கு அடிமை செய்து கிடப்பதையே விரும்பினேன் – என்றார்.

இவர் "பாருருவி நீரெரிகால்" என்கிற பாட்டிலே பரிசேஷக்ரமத்தாலே விவாதவிஷயமான மூவரை நிறுத்தி அவர்கள் மூவரிலும் ப்ரமாணாநுஸந்தாநத்தாலே இருவரைக் கழித்துப் பரிசேஷித்த பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஒருவனை "முகிலுருவம் எம் அடிகளுருவம்" என்று நிஷ்கர்ஷித்தார். இந்த ரூபவிசேஷத்தையுடைய பரமபுருஷனே ஸர்வவேத ப்ரதி பாத்யமான பரதத்த்வமென்னும் இடத்தை ஸர்வவேத ஸார பூத ப்ரணவ ப்ரதி பாத்யதையாலே "மூலமாகிய ஒற்றையெழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி வேலை வண்ணனை மேவுதிராகில்" என்று பெரியாழ்வார் அருளிச்செய்தார்.

விளக்கம் – திருநெடுந்தாண்டகம் (2) - பாருருவி நீரெரிகால் – பூமி, நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் ஆகியவற்றைப் படைத்தபின் – என்று தொடங்கும் பாசுரத்தில், அனைவராலும் பரவலாக ஆராயப்படும் மூன்று மூர்த்திகளையும் தன் முன்பாக நிறுத்துகிறார். பல ப்ரமாணங்களை உதவியுடன் இந்த மூவரில் இரண்டு மூர்த்திகளைத் தள்ளுகிறார். மீதம் உள்ள உயர்ந்த ஜோதியான நாராயணனை, திருநெடுந்தாண்டகம் (2) - முகிலுருவம் எம் அடிகளுருவம் – மேகம் போன்ற நிறம் கொண்ட என் நாராயணன் – என்றார். பெரியாழ்வாரும் இப்படியாக மேகம் போன்ற நிறமும் உருவும் கொண்டவனே உயர்ந்த தத்துவம் என்று வேதங்கள் முழங்குவதாகக் கூறுகிறார். இதனை தனது திருமொழியில் (4-5-4) - மூலமாகிய ஒற்றையெழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி வேலை வண்ணனை மேவுதிராகில் – அனைத்து வேதங்களுக்கும் மூலமாக உள்ள ஓர் எழுத்தான, மூன்று மாத்திரை அளவுள்ள ப்ரணவத்தை யாருக்கும் கேட்காதபடி ஜபித்து, கடல் போன்ற நிறம் கொண்ட எம்பெருமானைத் த்யானம் செய்தால் – என்றார்.

திவ்யதம்பதிகளே அனைத்துமாக உள்ளனர்

தைத்திரீயத்தில் ஸ்ரீய:பதித்வ சிஹ்நத்தாலே மஹாபுருஷனுக்கு வ்யாவ்ருத்தி ஓதினபடியே நினைத்துத் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று உபக்ரமித்துச் "சார்வு நமக்கு" என்கிற பாட்டிலே ப்ரதிபுத்தரான நமக்குப் பெரிய பிராட்டியாருடனே இருந்து என்றும் ஒக்கப் பரிமாறுகிற இவனையொழிய ப்ராப்யாந்தரமும் சரண்யாந்தரமுமில்லை. இத்தம்பதிகளே ப்ராப்யரும் சரண்யரும் என்று நிகமிக்கப்பட்டது.

விளக்கம் – தைத்திரீய உபநிஷத்தில் மஹாலக்ஷ்மியின் நாயகனே உயர்ந்த தத்துவம் என்று முழங்கப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மற்ற தெய்வங்களிடம் நாராயணனை வேற்றுமைபடுத்தி மூன்றாம் திருவந்தாதியில் (1) - திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் – என்று ஆழ்வார் அருளிச்செய்தார். இப்படியாகத் தொடங்கிய ஆழ்வார், மூன்றாம் திருவந்தாதியில் (100) - சார்வு நமக்கு – என்று நிறைவு செய்தார். இப்படியாக இந்த இறுதிப் பாசுரத்தின் மூலம் பெரிய பிராட்டியுடன் எப்போதும் நிற்கும் இவனே நமக்கு இலக்கும், சரணமடையும் இடமும் ஆவான் என்று அருளிச்செய்தார்.

இவ்வர்த்தத்தை தேவதா பாரமார்த்யம் ச யதாவத்வேத்ஸ்யதே பவாந், புலஸ்த்யேந யதுக்தம் தே ஸர்வமேதத்பவிஷ்யதி என்று புலஸ்த்ய வஸிஷ்ட வரப்ரஸாதத்தாலே பரதேவதாபாரமார்த்ய ஞானமுடையனாய், பெரியமுதலியார் தஸ்மை நமோ முநிவராய பராசராய என்று ஆதரிக்கும்படியான ஸ்ரீபராசரப்ரஹ்மர்ஷி பரக்கப்பேசி தேவ திர்யங் மநுஷ்யேஷு புந்நாம பகவாந் ஹரி: ஸ்த்ரீநாம்நி லக்ஷ்மீமைத்ரேய நாநயோர்வித்யதே பரம் என்று பரமரஹஸ்ய யோக்யனான ஸச்சிஷ்யனுக்கு உபதேசித்தான்.

விளக்கம் – இந்த உயர்ந்த தத்துவத்தை, உயர்ந்த ரஹஸ்யங்களைப் பெறும் தகுதியை உடைய தனது சிஷ்யனுக்கு பராசரமஹரிஷி உபதேசம் செய்தார். இதனை விஷ்ணு புராணம் (1-8-35) – தேவ திர்யங் மநுஷ்யேஷு புந்நாம பகவாந் ஹரி: ஸ்த்ரீநாம்நி லக்ஷ்மீமைத்ரேய நாநயோர்வித்யதே பரம் - மைத்ரேயரே! தேவர்கள், விலங்குகள், மனிதர்கள் என்றுள்ள பலவற்றில் ஆண்வர்க்கம் அனைத்தும் எம்பெருமானுக்கும், பெண்வர்க்கம் அனைத்தும் மஹாலக்ஷ்மிக்கும் அடங்கியவை ஆகும் – என்றார். இந்தப் பராசர மஹரிஷி எம்பெருமானைப் பற்றிய ஞானத்தை புலஸ்த்யர் மூலமாகவும், வசிஷ்டர் மூலமாகவும் பெற்றார். இவரைப் புலஸ்த்யர் (விஷ்ணு புராணம் : 1-1-26) - தேவதா பாரமார்த்யம் ச யதாவத்வேத்ஸ்யதே பவாந் – பரதேவதையை பற்றிய உண்மையை நீ அறிவாயாக – என்றும், வசிஷ்டர் (புராணம் : 1-1-26) - புலஸ்த்யேந யதுக்தம் தே ஸர்வமேதத்பவிஷ்யதி – புலஸ்த்யர் உனக்கு அருளிய அனைத்தும் கைகூடும் – என்றும் அருளினர். இவரை ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (4) - தஸ்மை நமோ முநிவராய பராசராய – முனிவர்களில் உயர்ந்தவரான பராசர முனிவரை நான் வணங்குகிறேன் – என்று வணங்கினார்.

இத்தை மயர்வற மதிநலமருளப் பெற்று ஆத்யஸ்ய ந: குலபதே: என்கிறபடியே ப்ரபந்நஸந்தாந கூடஸ்தரான நம்மாழ்வாரும் "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக்கண்ட சதிர் கண்டு" என்று அருளிச் செய்தார். இவ்விஷயத்தில் வக்த்வ்யமெல்லாம் சது:ச்லோகீ வ்யாக்யாநத்திலே பரபக்ஷ ப்ரதிக்ஷேப்பூர்வகமாகப் பரக்கச் சொன்னோம். அங்கே கண்டு கொள்வது.

விளக்கம் – நாம் அடையும் இலக்காக, நமக்குச் சரணம் அளிக்கும் இடமாக பகவானுடன் பிராட்டியும் சேர்ந்தே உள்ளால் என்னும் கருத்தை, ப்ரபத்தி செய்தவர்களின் பரம்பரையில் முதலாவதாக உள்ளவரும், எம்பெருமானிடம் இருந்து தடுமாற்றம் இல்லாத ஞானத்தைப் பெற்றவரும் ஆகிய நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-9-10) - ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக்கண்ட சதிர் கண்டு – அழகான கைவளையல்களுடன் கூடிய நீயும் பிராட்டியும் நிற்கையில் - என்று அருளிச்செய்தார்.

வாதியர் மன்னும் தருக்கச் செருக்கின் மறைகுலையச்
சாது சனங்கள் அடங்க நடுங்கத் தனித்தனியே
ஆதி எனாவகை ஆரணதேசிகர் சாற்றினர் – நம்
போதமரும் திருமாதுடன் நின்ற புராணனையே

பொருள் – தவறான வாதம் செய்பவர்கள் தங்களிடம் ஸ்திரமாக நிலைத்து நிற்கும் தர்க்கம் செய்யும் திறன் காரணமாகச் செய்ய முயன்றது என்னவெனில் – வேதங்கள் நடுங்குபடியாக, எம்பெருமானின் அடியார்கள் நடுங்கும்படியாக, அவரவர்கள் எண்ணியபடி சிவன், ப்ரம்மன் முதலானோர்களே இந்த உலகின் காரணம் என்று கூற முற்பட்டனர். ஆனால் அவர்கள் அவ்விதம் கூற இயலாதபடி வேதாந்த சாஸ்த்ர நிபுணர்களான நமது ஆசார்யர்கள் செய்தது என்ன? தாமரை மலரில் அமர்ந்துள்ள பெரிய பிராட்டியின் நாயகனான நிற்கும் ஆதி புருஷனான நாராயணனையே இந்த உலகின் காரணம் என்று நிரூபித்தனர்.

ஜநபத புவநாதி ஸ்தாந் ஜைத்ராஸநஸ்தேஷு
அநுகத நிஜவார்த்தம் நச்சரேஷு ஈச்வரேஷு
பரிசித் நிகமாந்த: பச்யதி ஸ்ரீஸஹாயம்
ஜகதி கதிம் அவித்யா தந்துரே ஜந்துரேக:

பொருள் – எல்லையற்ற கர்மங்கள், அறியாமைகள் சூழ்ந்த இந்த உலகத்தில், பல இடங்களிலும் உலகங்களை வென்று அமர்ந்தவர்களான பலரும், தங்களைப்

பற்றிய வீரக்கதைகள் தங்களுடன் சேர்ந்து நாசம் அடையும்படி உள்ளனர். இப்படிப்பட்ட உலகத்தில், வேதாந்தங்களை அறிந்த ஒருவன் ஸ்ரீமந் நாராயணனை, இந்த உலகின் ரக்ஷகனாகக் காண்கிறான்.

ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் ஆறாம் அத்யாயமான

பரதேவதாபாராமார்த்த்யாதிகாரம் ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

முமுக்ஷுப்படி

ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 21)

த்வயப்ரகரணம்

வ்யாக்யாந அவதாரிகை

ப்ரதம ரஹஸ்யமான திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்த அநந்தரம், அதில் மத்யமபதத்தாலும் த்ருதீய பதத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட உபாயோபேயங்களை விசதமாக ப்ரதிபாதியா நின்றுள்ள த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்கிறார்.

விளக்கம் - ரஹஸ்யத்ரயம் என்று கூறப்படுவதில், முதல் ரஹஸ்யமான திருமந்திரத்தின் பொருளை முதலில் அருளிச்செய்தார். அதன் பின்னர் – திருமந்திரத்தின் நடுப்பதமான "நம:" என்பதால் கூறப்பட்ட உபாயம், மூன்றாவது பதமான "நாராயண" என்பதால் கூறப்பட்ட உபேயம் ஆகியவற்றின் பொருளைத் தன்னுள்ளே கொண்டுள்ள த்வயத்தின் பொருளை அருளிச்செய்கிறார்.

முன்பு அருளிச்செய்த மூன்று ப்ரபந்தங்களிலும் திருமந்த்ராநந்தரம் சரமச்லோகத்தை அருளிச்செய்து பின்பு த்வயத்தை அருளிச்செய்தவர், இப்போது த்வயத்தை முந்துற அருளிச்செய்வான் என்? என்னில், இரண்டு ப்ரகாரமும் அருளிச்செய்யலாயிருக்கையாலே. ஆச்சான்பிள்ளை, சீயர் முதலானாரும் இந்த ப்ரகாரமிறே அருளிச் செய்தது.

விளக்கம் - இதற்கு முன்னர் இவர் அருளிச்செய்த மூன்று ப்ரபந்தங்களில் (யாத்ருச்சிகப்படி, பரந்தபடி, ஸ்ரீயபதிப்படி) திருமந்த்ரத்திற்கு பின்னால் சரமச்லோகத்தை அருளிச்செய்து, அதன் பின்னர் த்வயத்தை அருளிச்செய்தார். ஆனால் இங்கு த்வயத்தை முதலில் அருளிச்செய்து, அதன் பின்னர் ஏன்

சரமச்லோகத்தை அருளிச் செய்யவேண்டும்? இதன் காரணம் - இரண்டு விதமாகவும் கூறலாம் என்பதால் ஆகும். ஆச்சான்பிள்ளையும், ஜீயரும் (வாதிகேசரி ஜீயர்) இப்படியே அருளிச்செய்தனர்.

இவ்விரண்டு ப்ரகாரந்தனக்கும் கருத்து என்? என்னில், ச்ரமச்லோகம் முன்னாக த்வயத்தைச் சொல்லுகிறது - வித்யநுஷ்டாந ரூபங்களாயிருக்கையாலே விதிமுன்னாக அநுஷ்டாநத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்கையாலும், திருமந்த்ரம் ப்ராப்யபரமாய் சரமச்லோகம் ப்ராபகபரமாய் த்வயம் உபயத்தினுடையவும் அநுஷ்டாந ப்ரதிபாதகமாயி ருக்கையாலும், த்வயம் முன்னாகச் சரமச்லோகத்தைச் சொல்லுகிறது – திருமந்த்ரத்தில் மத்யமத்ருதீய பதங்களுக்கு வாக்யத்வயம் விவரணமாய். அதுதனக்குச் சரமச்லோகத்தில் அர்த்த த்வயம் விவரணமாயிருக்குமாகாரத்தாலே, ஆனபின்பு, இரண்டு ப்ரகாரமும் அநுஸந்திக்கத் தட்டில்லை. அதில் ஒரு ப்ரகாரத்தை மூன்று ப்ரபந்தங்களிலும் அருளிச்செய்தவராகையாலே, மற்றை ப்ரகாரத்தையும் அருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி, திருமந்த்ரார்த்தம் அருளிச் செய்த அநந்தரம் த்வயார்த்தத்தை அருளிச் செய்கிறார்.

விளக்கம் - இந்த இரண்டு வரிசை முறைகளுக்கு ஏதேனும் விளக்கம் உண்டா? உண்டு, த்வயத்திற்கு முன்னால் சரமச்லோகத்தை கூறுதல் என்பது - விதியைக் கூறிவிட்டு அதன் பின்னர் அந்த விதியைப் பின்பற்றும் முறையைக் கூறுதல் - போன்றதாகும். மேலும் இந்த வரிசையில் கூறும்போது – அடையப்படும் இலக்கை (ப்ராப்யம்) கூறும் திருமந்த்ரம், அடையப்படும் இலக்கை அடைவதற்காகப் பின்பற்றும் உபாயத்தைக் கூறும் சரமச்லோகம் (ப்ராபகம்), இந்த இரண்டையும் எவ்விதம் பின்பற்ற வேண்டும் என்று கூறும் த்வயம் என்பது சிறந்த வரிசையாக உள்ளது. த்வயத்துக்கு முன்னால் சரமச்லோகம் கூறப்படும் வரிசை ஏன் என்றால் - த்வயத்தில் உள்ள இரண்டு வரிகளும் திருமந்திரத்தின் நடு மற்றும் மூன்றாவது பதங்களை விளக்குவதாகவும், சரமச்லோகத்தின் இரண்டு கருத்துக்களும் த்வயத்தை விளக்குவதாகவும் உள்ளன. ஆகையால் இரண்டு விதமாகவும் கூறுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை. இவற்றின் ஒரு வரிசையை மூன்று பிரபந்தங்களில் அருளிச் செய்தபடியால், அடுத்த வரிசையை இங்கு அருளிச் செய்ய திருவுள்ளம் கொண்டார். ஆகவே திருமந்திரத்தின் பொருளை அருளிச்செய்த பின்னர் த்வயத்தின் பொருளை அருளிச்செய்தார்.

வ்யாக்யான அவதாரிகை ஸம்பூர்ணம்

116. புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறுதப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாள் உகந்தருளின

நிலங்களிலே ப்ரவணனாய் குணநுபவ கைங்கர்யங்களே தொழுது போக்காகையும், இப்படி இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கையும், திருமந்திரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்யப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும் விரக்தியும் சாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையும் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதம்.

அவதாரிகை - அதில் ப்ரதமத்திலே, வைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு ஸ்வாதிகாரார்த்தமாக அவச்யாபேக்ஷிதமாயுள்ளவற்றை, ஸூக்ஷ்மமாக அருளிச்செய்கிறார் - புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும் - என்று தொடங்கி ஒரு சூர்ணையாலே.

விளக்கம் - முதல் சூர்ணையில் ஸ்ரீவைஷ்ணவனாக ஒருவன் இருப்பதற்கான தகுதியை அளிக்கவல்ல தன்மைகளை எளிதாக விளங்கும்படி அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையாவது -பிதரம் மாதரம் தாராந் இத்யாதிப்படியே, பாஹ்யவிஷய ஸங்கங்களையடைய மறுவலிடாதபடி ஸவாஸநமாகவிடுகை. எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையாவது - வேறொன்று தஞ்சமென்கிற நினைவு கலசாதபடி, நிருபாதிக ரக்ஷகனான ஸர்வேச்வரனையே தஞ்சமாக ஸ்வீகரிக்கை. இவ்விரண்டு வாக்யத்திலும், சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்தில் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். எங்ஙனேயென்னில்? புறம்புண்டான பற்றுக்களையடைய என்று “ஸர்வதர்மாந்” என்கிற பதத்தில் அர்த்தத்தையும், வாஸனையோடே விடுகையும் என்று “பரித்யஜ்ய” என்கிற பதத்தில் அர்த்தத்தையும், எம்பெருமானை என்று ”மாம்” என்கிற பதத்தில் அர்த்தத்தையும், ஏ என்று ஏவகாரத்தாலே “ஏக” பதத்தில் அர்த்தத்தையும், தஞ்சம் என்கையாலே – ”சரண” பதத்தில் அர்த்தத்தையும், பற்றுகையும் என்று ”வ்ரஜ” பதத்தில் அர்த்தத்தையும் அடைவே சொல்லுகையாலே.

விளக்கம் – ”புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகை” என்பதன் மூலம், சரணாகதி கத்யம் – பிதரம் மாதரம் தாராந் – தந்தை, தாய், தாரம் - என்று கூறுவதற்கேற்ப அனைத்து உலக விஷயங்களின் பற்றுதல்களை, அந்தப் பற்றுதல்கள் மீண்டும் தோன்றாதபடி அவற்றின் வாசனையுடன் கைவிட வேண்டும் என்பதாகும். ”எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகை” என்பது என்னவென்றால் – வேறு எதுவும் நமக்குத் தஞ்சம் என்ற நினைவு தோன்றாதபடி; நமது இயல்பான ரக்ஷகன் என்று எம்பெருமானை ஏற்பது - உணர்த்தப்பட்டது.

இந்த இரண்டு வரிகளும் சரமச்லோகத்தின் முதல் வரிக்கான பொருளைக் கூறுவதாகும். எப்படி என்றால்: "புறம்புண்டான பற்றுகளை உடைய " என்பதன் மூலம் "ஸர்வ தர்மாந்" என்றும்; "வாசனையோடு விடுகை" என்பதன் மூலம் "பரித்யஜ்ய" என்றும்; "எம்பெருமானை" என்பதன் மூலம் "மாம்" என்றும்; "ஏ" என்பதன் மூலம் "ஏக" என்றும்; "தஞ்சம்" என்பதன் மூலம் "சரண" என்றும், "பற்றுகையும்" என்பதன் முலம் "வ்ரஜ" என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - பேறுதப்பாதென்று துணிந்திருக்கையாவது - உபாயபல்குத்வமும், உத்தேச்ய துர்லபத்வமும், ஸ்வக்ருத தோஷபூயஸ்த்வமும் அடியாக வரும் சங்காத்ரயமு மின்றிக்கே பலம் தப்பாமல் ஸித்திக்குமென்று விச்வஸித்திருக்கை. பேற்றுக்கு த்வரிக்கையாவது - இப்படி விச்வஸித்து "பேறு ஸித்தித்தபோது காண்கிறோம்" என்று இருக்கையன்றிக்கே, "மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்", "தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதோ" என்கிறபடியே, க்ரமப்ராப்தி பற்றாமற் பதறுகை. ஆக இவை இரண்டாலும் உபாயோபேயாதிகாராபேக்ஷிதங்களான மஹாவிச்வாஸத்தையும், ப்ராப்யத்வரையையும் சொல்லுகிறது.

விளக்கம் - பேறுதப்பாதென்று துணிந்திருக்கை – உபாயங்களின் ஏற்படும் கடினம், குறிக்கோளில் நிலை நிற்கும் கடினம் மற்றும் எல்லையற்ற பாவங்கள் செய்தமை ஆகியவற்றினால் எழும் ஐயங்களை நீங்கி, இறுதியான பலன் நிச்சயம் கிட்டும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை என்பதாகும். பேற்றுக்கு த்வரிக்கை - இப்படியாக மஹாவிச்வாஸத்துடன் உள்ள ஒருவன், அந்த உயர்ந்த பலன் கிடைக்கும்போது கிடைக்கட்டும் என்று மெத்தனமாக இருத்தல் கூடாது. திருவாய்மொழி (9-3-7) - மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும், திருவாய்மொழி (6-9-9) - தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதோ - என்று கூறுவதற்கு ஏற்ப, காத்திருக்க முடியாமல் பதறியபடி இருக்க வேண்டும். இப்படியாக உபாயத்தைக் கைக்கொள்ளும் தகுதியை உணர்த்தும் மஹாவிச்வாஸம், உபேயமான எம்பெருமானை அடைவதற்கான தகுதியான பொறுமை இன்மை ஆகியவை உணர்த்தப்பட்டது.

வ்யாக்யானம் - இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே பொழுது போக்கையாவது – பரமபதத்திலேபோய் பகவதநுபவ கைங்கர்யங்களைப் பண்ணுகையாகிற பேற்றில் த்வரை நடவா நிற்கச்செய்தேயும், இச்சரீரத்தோடே இருக்கும் நாள் "தானுகந்தவூர்" என்கிறபடியே ஸர்வேச்வரன் உகந்து வர்த்திக்கிற திவ்யதேசங்களிலே "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லி" என்று மண்டுகையாகிற ப்ராவண்யத்தையுடையனாய், அவ்வோ திவ்யதேசங்களிலே நிற்கிறவனுடைய கல்யாணகுணாநுபவமும், அதடியாகக்

கரணத்ரயத்தாலும் அவன் விஷயத்திற் பண்ணும் கைங்கர்யமும் காலக்ஷேப விஷயமாம்படியிருக்கை.

விளக்கம் - இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே பொழுது போக்கை – பரமபதத்திற்குச் சென்று, பகவத் அனுபவ கைங்கர்யம் என்ற பலனைப் பெறுவதற்கான வேகத்துடன் உள்ளபோதிலும், அந்தக் காலம் வரும்வரை செய்ய வேண்டியது என்ன? திருநெடுந்தாண்டகம் (6) - தான் உகந்த ஊர் - என்பதற்கு ஏற்ப, இந்த உடல் இருக்கும்வரை ஸர்வேச்வரன் மனம் மகிழ்ந்து வாசம் செய்கின்ற திவ்ய தேசங்களுக்குச் சென்று வசிப்பவனாய், திருக்குருந்தாண்டகம் (19) - கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லி - என்று கூறுவதற்கேற்ப, அந்தந்த திவ்ய தேசங்களில் நிற்கின்ற ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்களை அனுபவித்தபடி இருக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல், அந்த எம்பெருமான்களுக்கு மனதாலும், உடலாலும், வாக்காலும் கைங்கர்யம் செய்தபடி இருந்து, பொழுதைப் போக்கவேண்டும்.

வ்யாக்யானம் - இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றும் அறிந்து உகந்திருக் கையாவது - கீழ்ச்சொன்ன இவ்வாகாரங்களெல்லாம் உடையராயிருக்கும் வைஷ்ணவர்களைக் கண்டால், இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே இந்த விபூதியிலே இங்ஙனேயும் சிலருண்டாவதேயென்று அவர்கள் வைபவத்தை அறிந்து, அவர்களளவில் ப்ரீதியுக்தனாயிருக்கை. கீழ்ச்சொன்னவையெல்லாம் உண்டானாலும் உண்டாக அரிதாயிருப்பதொன்றிறே இது.

விளக்கம் - இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றும் அறிந்து உகந்திருக்கை – இதுவரை கூறப்பட்ட தன்மைகள் கொண்ட ஸ்ரீவைஷ்ணவர்களைக் காணும் யார் ஒருவரும், "நெருப்புச் சட்டிக்குள் தாமரை பூத்தது போன்று, இந்த ஸம்ஸார உலகத்திலும் இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களும் இருக்கின்றனரே", என்று வியந்து போகவேண்டும். அவர்களிடம் மிகுந்த ப்ரியத்துடன் இருத்தல் வேண்டும். மேலே கூறிய பல தன்மைகள் ஒருவனுக்கு இருந்தாலும், இவ்விதம் ஸ்ரீவைஷ்ணவர்களைப் போற்றும் தன்மை மிகவும் அரிதாகும்.

ஸ்ரீபிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம்
ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

… தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

திருவெழுகூற்றிருக்கை
(பகுதி – 4)

வ்யாக்யானம் – 1

வ்யாக்யானம் – (மூவடியித்யாதி) – அம்பாலே ஸாதிக்கவொண்ணாதவிடம் அழகாலே ஸாதித்தபடி சொல்லுகிறது. (மூவடி நால்நிலம் வேண்டி) – நாலுவகைப்பட்ட பூமியிலே மூவடியை வேண்டி. (முப்புரி நூலொடு மானுரியிலங்கு மார்வினில்) – ஒரு காளமேகத்திலே மின்னலை ஏறிட்டாற்போலே திருயஜ்ஞோபவீதமும், அத்தோடு கூடின க்ருஷ்ணாஜிநமும் விளங்காநின்ற திருமார்பையுடையையாய். (இருபிறப்பு) – த்விஜனுமாய். (ஒருமாணாகி) – ஒப்பில்லாத ஸ்ரீவாமநனாய், தானே இன்னுமொருகால் இவ்வடிவு கொள்ளவேணுமென்னிலும் இப்படி வாயாத வடிவுடையனாய். (ஒரு முறையீரடி மூவுலகளந்தானை) – ஒருகால் இரண்டடியாலே மூன்று லோகத்தையும் அளந்து கொண்டாய். இத்தால் – இந்த்ரனுக்கு ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தாற்போலே என்னுடைய சேஷத்வத்தையும் மீட்டுத் தந்தருளவேணும் என்கிறார். தேவர்கள் சென்றிரந்தார்க்கிடர் நீக்கிய கோட்டங்கை வாமனனாய் என்று உன்னையிரந்தாரிப்புக்கு நீயுமிரந்து அவர்கள் அபேக்ஷிதம் பார்க்குமவனல்லையோ? இசையாதார் தலைகளில் வைத்த திருவடிகளை இசைந்த என் தலையில் வைத்தலாகாதோ? ப்ரயோஜநாந்தர பரனுடைய இழவு தீர்த்த உனக்கு அநந்ய ப்ரயோஜநனான என்னுடைய இழவு தீர்க்கலாகாதோ? இந்த்ரன் கழஞ்சு மண்ணன்றோ இழந்தது; நான் என்னையும் உன்னையுமன்றோ இழந்தது.

விளக்கம் - (மூவடியித்யாதி) – அம்பால் தனது செயலை முடித்துக் கொள்ள ஏற்றதாக இல்லாத சூழ்நிலையில், தனது அழகைக் காண்பித்து முடித்துக் கொள்வான். (மூவடி நால்நிலம் வேண்டி) – மலை, காடு, நிலம், கடல் என்னும் நான்கு வகைப்பட்ட பூமியில் மூன்று அடி நிலம் வேண்டி வாமனனாக நின்று. (முப்புரி நூலொடு மானுரி இலங்கு மார்வினில்) – நீர் கொண்ட மேகத்தில் தோன்றுகின்ற மின்னல் போன்று, கரிய இவனது திருமார்பில் உள்ள வெண்மையான திருயஜ்ஞோபவீதம்; அதனுடன் சேர்த்துக் கட்டப்பட்ட மான்தோல்; இவற்றுடன் அழகாக உள்ள திருமார்பு கொண்டவனாக. (இருபிறப்பு) – இரண்டாம் பிறப்பு உண்டாக்கவல்ல உபநயனம் ஆகியவனாக. (ஒருமாணாகி) - ஒப்பற்ற வாமன வேஷம் பூண்டு. தானே மீண்டும் இப்படி ஒரு வாமன வேஷத்தை எடுக்க வேண்டும் என்று எண்ணினாலும், இத்தனை அழகு உண்டாகாது என்று உறுதியாகக் கூறலாம்படியான அழகு. (ஒரு முறையீரடி மூவுலகளந்தானை) – ஒரே நேரத்தில் இரண்டு திருவடிகளால், மூன்று லோகங்களையும் அளந்து எடுத்துக் கொண்டாய். இதன் மூலம், “இந்த்ரனுக்கு அவன் ஆசைப்பட்ட ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தாய், அது போன்று நான் இழந்துள்ள எனது கைங்கர்யத்தை மீட்டுத் தரவேண்டும்”, என்றார். திருவாய்மொழி (7-5-6) - தேவர்கள் சென்றிரந்தார்க்கிடர் நீக்கிய கோட்டங்கை வாமனனாய் – என்று கூறுவதற்கு ஏற்ப, உன்னிடம் யாசகம் வேண்டி நின்றவர்களுக்காக, யாசகம் செய்யும் குணம் படைத்தவன் அல்லவா நீ? அப்படி யாசகம் செய்தவர்களின் குறைகளைக் காணாமல் உள்ளவன் அல்லவா நீ? உன்னை ஏற்காதவர்களின் தலைகளிலும் உனது திருவடிகளை வைத்த நீ, உன்னைப் பெரிதும் விரும்பும் எனது தலையில் வைக்கக்கூடாதா? அற்பமான பலனை விரும்பி வந்தவர்களின் துன்பத்தை தீர்த்த நீ, எந்தப் பலனும் எதிர்பாராமல் உள்ள எனது துன்பங்களை நீக்கக் கூடாதா? இந்த்ரனைப் போன்று அற்ப மண்ணையா நான் இழந்தேன்? நான் இழந்தது – உனக்கே அடிமையாக இருக்கவேண்டிய எனது ஆத்மாவையும், உன்னையும் அல்லவா?

வ்யாக்யானம் – 2

வ்யாக்யானம் - (மூவடியித்யாதி) – அம்பாலழிக்கவொண்ணாத இடத்தை அழகாலும் இரப்பாலும் அழியச் செய்தபடி. ப்ரயோஜநாந்தர பரரான இந்த்ராதிகளுடைய கார்யஞ்செய்த நீ உன்னையே ப்ரயோஜநமாக நினைத்திருக்கிற என் கார்யஞ் செய்யலாகாதோ? (மூவடி நால்நிலம் வேண்டி) – ஈரடியாலே பூமியையளந்து ஓரடிக்கு அவனைச் சிறையிட்டு வைக்க நினைத்து மூன்றடியை இரந்தானாயிற்று. நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என்றாற்போலே சொல்லுகிற அன்னலும் துன்னலுமான பூமியை அர்த்தித்து; இந்நாலிலும் ருஜீஷாம்சமாய்க் கழித்தது பாலை நிலமென்று சொல்லுவார்கள்.

இவர்க்கபிமதமும் நாலென்னுமிடம் தோற்றியிருந்ததிறே. (முப்புரியித்யாதி) – மேகத்திலே மின்னினாற்போலே சாத்தின யஜ்ஞோபவீதமும் க்ருஷ்ணாஜிநமும் விளங்கா நின்றுள்ள திருமார்வை உடையையாய், உபநயநம் பண்ணின புதுமை தோற்றும்படியிருப்பாயுமாய். இந்த்ரனுடைய அர்த்தித்வம் தலைக்கட்டுகைக்காக இட்டபோதோடு இடாதபோதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலே தகணேறின வாமந வேஷத்தைப் பரிக்ரஹித்து, ஒருகால் த்ரைலோக்யத்தையும் ஈரடியாலே அளந்துகொண்டாய். ஆசையில்லாதார் தலைமேலேயும் வைக்கும் திருவடிகளை ஆசையுடைய என் தலையிலேயும் வைக்கலாகாதோ? இந்த்ரனைப் போலே கழஞ்சு மண் பெறுதல், மஹாபலியைப் போல் ஔதார்யங்கொண்டாடுதல் செய்யவிருக்கிறேனோ நான்? உன்னைப் பெறவேணும் என்றன்றோ நானர்த்திக்கிறது. உன்னை வைத்து வேறொன்றை இரந்தார்க்கோ நீ இரப்பாளனாய்க் கார்யஞ்செய்வது? உன்னையே இரந்தார் கார்யம் செய்யலாகாதோ? மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி கதா என்றிறே நானிருக்கிறது.

விளக்கம் - (மூவடியித்யாதி) – அம்பு எய்து அழிக்க இயலாதபோது, தனது அழகைக் காண்பித்தும், யாசகம் செய்தும் அழியச்செய்தல். உன்னை அல்லாமல் வேறு பலன்களை எதிர்பார்த்து நின்ற இந்த்ரன் முதலானோர்களுக்கு நீ உதவும்போது, உன்னையே நான் அடையும் பலனாக எண்ணும் எனக்கு உதவக்கூடாதா? (மூவடி நால்நிலம் வேண்டி) – இரண்டு அடியால் பூமியை அளந்து, ஓரடியால் மஹாபலியைச் சிறை வைக்க எண்ணினான். அதனால்தான் மூன்று அடி நிலம் வேண்டும் என்று கேட்டான். நான்கு நிலம் என்பது – நெய்தல் (கடலும் கடல் சார்ந்த பகுதிகளும்), மருதம் (நிலமும் நிலம் சார்ந்த பகுதிகளும்), முல்லை (காடும் காடு சார்ந்த பகுதிகளும்), குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த பகுதிகளும்) – என்பவை ஆகும். தண்ணீர் முதலான ஜீவராசிகள் வாழ்வதற்கு ஏற்ற பொருள்கள் ஏதும் இல்லாத காரணத்தால் பாலை நிலத்தைக் கழித்துவிடுவார்கள். கவிஞர்கள் "நானிலம்" என்று கூறுவது போன்றே இவரும் கூறுகிறார். (முப்புரியித்யாதி) - நீர் கொண்ட மேகத்தில் தோன்றுகின்ற மின்னல் போன்று, கரிய இவனது திருமார்பில் உள்ள வெண்மையான திருயஜ்ஞோபவீதம்; அதனுடன் சேர்த்துக் கட்டப்பட்ட மான்தோல்; உபநயநம் செய்து வைக்கப்பட்ட புதுமை மாறாமல் உள்ள தன்மை. இந்த்ரன் தன்னை வேண்டி நின்ற ராஜ்யத்தை அவனுக்கு மீண்டும் பெற்றுத்தர முடிவு செய்தான்; இதனால் தான் யாரிடமாவது சென்று யாசிக்கும்போது அவர்கள் பிச்சை இட்டாலும், பிச்சை இடாவிட்டாலும் ஒரே போன்ற மலர்ச்சியுடன் உள்ள திருமுகத்துடனும், இரத்தல் என்பதையே குறிக்கோளாகக் கொண்டவனாகவும் ஆகிய வாமன வேஷம் பூண்டான்; இரண்டு அடியால் மூன்று உலகங்களையும் அளந்து எடுத்துக் கொண்டாய். உன்னை ஏற்காதவர்களின் தலைகளிலும் உனது திருவடிகளை வைத்த நீ, உன்னைப் பெரிதும் விரும்பும் எனது தலையில் வைக்கக்கூடாதா? இந்த்ரனைப் போன்று அற்பமான மண் ஆசையும், மஹாபலி போன்று யாசக கர்வமும் எனக்கு

உள்ளதோ? இல்லை, உன்னைப் பெறவேண்டும் என்ற எண்ணம் மட்டும் அல்லவோ என்னிடம் உள்ளது? உன் மூலம் வேறு ஒரு பொருளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கா நீ உதவுவது? உன்னையே பெறவேண்டும் என்று கேட்பவர்களுக்கு அல்லவோ நீ உதவவேண்டும்? ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (31) - மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி கதா – உனது திருவடிகள் எனது தலையை எப்போது அலங்கரிக்கப் போகின்றன – என்று கேட்டது போல் அல்லவா நானும் உள்ளேன்?

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

திருமாலை

(பகுதி – 11)

(இரங்கும்) – அத்வேஷயுக்தனுக்கு இது புருஷார்த்தமாம்போது, ஸ்வாபாவிக ஸம்பந்தத்தாலே இத்தலையில் ஆபிமுக்யத்திலே அவஸரப்ரதீக்ஷனா யிருக்கையிறே, பெறுகிறது தன்னை; இத்தலையிலுள்ளது விலக்காமை; பேற்றுக்கு இது எங்ஙனே போரும்? அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்குமாபோல,. தானே எல்லாம் செய்தாலும் "ஒன்றும் செய்திலோம்" என்னும் இரக்கமேயாய்த்து உள்ளது என்றுமாம். "உன்னடியார்க்கு என் செய்வனென்றேயிருத்தி நீ" என்னக் கடவதிறே.

விளக்கம் – (இரங்கும்) –மேலே கூறப்பட்டபடி ஸர்வேச்வரன் விஷயத்தில் த்வேஷம் இல்லாதவர்களுக்கு கிட்டுவது "ஸர்வேச்வரனுக்கு அடிமை" என்னும் உயர்ந்த புருஷார்த்தமாகும். தன்னுடன் சேதனர்களுக்கு உள்ள இயற்கையான உறவு காரணமாக இவர்களிடம் இந்தத் த்வேஷம் இல்லாமையை எதிர்பார்த்தபடி ஸர்வேச்வரன் உள்ளான். இதன் காரணமாக சேதனர்கள் அடைவது ஸர்வேச்வரன் என்னும் புருஷார்த்தமே ஆகும். இதற்காக சேதனர்களிடம் உள்ள தன்மை த்வேஷம் இல்லாமை என்பதே ஆகும். ஸர்வேச்வரன் என்னும் இத்தனை பெரிய புருஷார்த்தத்தை அடைவதற்கு "த்வேஷம் இன்மை" என்னும் சிறிய உபாயம் மட்டும் போதுமோ? போதுமானது, காரணம் தான் ஈன்ற கன்றுக்குத் தாய்ப்பசு இரங்கி நிற்பது போன்று, அடியார்களுக்கு எத்தனை உதவிகள் தானாகவே வலிய வந்து செய்தாலும், "இவர்களுக்கு நான் ஏதும் செய்யவில்லையே", என்று வருந்தும் இயல்பு கொண்டவன் ஸர்வேச்வரன் ஆவான். இவனைப் பற்றி நம்மாழ்வார் பெரியதிருவந்தாதியில் (53) – உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி நீ – என்று அருளிச்செய்தார் அன்றோ?

(நம் அரங்கனாய) – அகிஞ்சநரான நமக்காகவிறே கோயிலிலே வந்து கண் வளர்ந்தருளுகிறது. பரமபதம் நித்யருக்கும், முக்தருக்கும். திருப்பாற்கடல் முக்தப்ராயரான ஸநகாதிகளுக்கும், ப்ரஹ்மாதிகளுக்கும். அவதாரங்கள் தத்காலீநரான பாக்யாதிகளுக்கு. கோயிலில் நிலை தேசகாலங்களுக்குப் பிற்பாடரான நிர்ப்பாக்யருக்கு முகங் கொடுக்கவிறே. "நம்" என்றது க்ஷத்ரபந்துவோடு ஸகோத்ரிகளான நமக்கும் ஸு்லபனான இடமென்கை.

(பித்தனை) – பித்தராகிறார் – பூர்வாவஸ்தையில் ஜ்ஞாநமின்றியிலே யொழிந்தார். தன்னையும் அறியாதே, பிறரையும் அறியாதே இருக்குமவர் என்றுமாம். அதாகிறது – கொள்ளுமவன் சிறுமை பார்த்தல், கொடுக்கிறவன் பெருமை பார்த்தல், கொடையின் சீர்மை பார்த்தல் செய்ய அறியாதிருக்குமவன் என்கை. (பெற்றும்) – தான் குறைவாளனேயாகிலும் குறை தீர்க்கும் ரக்ஷகனிருந்தவிடத்தே செல்லவேணுமிறே. அது வேண்டாதபடி பூர்ணனான தான் "என்னைக் கொள்வாருண்டோ?" என்று கிடக்கிற இடம்.

விளக்கம் - (நம் அரங்கனாய) – எந்தவிதமான உபாயமும் சிறிதும் இல்லாத நமக்காக அல்லவோ இவன் திருவரங்கத்தில் கண்வளர்கிறான். பரமபதம் என்பது அவன் நித்யஸூரிகளுக்காகவும், முக்தி பெற்றவர்களுக்காகவும் இரக்கதுடன் காட்சி அளிக்கும் இடமாகும். திருபாற்கடல் என்பது முக்தி பெற்றவர்களுக்கு நிகரான ஸனகர் முதலானவர்களுக்கும், ப்ரம்மன் முதலானவர்களுக்கும் இரக்கம் கொள்ளும் இடமாகும். இவனது பல்வேறு திருஅவதாரங்கள், அந்த அவதாரங்களின் காலத்தில் இருந்தவர்களுக்கு இரக்கம் கொள்வதற்காக ஆகும். ஆனால் இந்தப் பெரியகோயில் என்பது பரமபதம், திருப்பாற்கடல் முதலான இடங்களுக்குச் செல்ல இயலாதவர்கள், விபவ அவதார காலத்திற்குப் பிற்பட்டவர்கள் ஆகியவர்களுக்குத் தனது இனிய திருமுகத்தைக் காண்பிக்கும் இடமாக உள்ளது. "நம்" என்ற பதம் இட்டதன் காரணம் – க்ஷத்ரபந்துவைப் போன்ற நமக்கும் மிகவும் எளியவனாக உள்ள நிலை. (பித்தனை) – தனது முந்தைய நிலை என்னவென்று அறியாதவர்கள் பித்தர்கள் ஆவர்; தன்னையும் சரிவர அறிந்து கொள்ளாமல், மற்றவர்களையும் அறிந்து கொள்ளாமல் இருப்பவர்கள் பித்தர்கள் ஆவர்; தனது அடியார்களின் சிறுமை, தன்னுடைய மேன்மை, தான் அவர்களுக்கு அளிக்கும் பொருளான சிறந்த புருஷார்த்தம் என்பதின் மேன்மை ஆகிய்யற்றைக் காணாமல் உள்ளான். (பெற்றும்) – உலகில் பொதுவாக குறையுள்ளவர்கள், தங்களைக் காப்பாற்றவல்ல குறையில்லாதவனிடம் சென்று நிற்பதே முறையாகும். ஆனால் இங்கு அப்படி அல்லாமல், குறையுள்ள நம்மைத் தேடி, அனைத்து விதத்திலும் நிறைவாக உள்ளவன், "என்னை யாரும் வந்தடைய மாட்டார்களா?", என்று ஏக்கத்துடன் சயனித்துள்ள இடம்.

(அந்தோ பிறவியுள் பிணங்குமாறே) – ஸுலபமான விஷயத்தை விட்டுப் போனாலுமிறே, போய்ப் பெறுகிற விஷயம் இத்தோடு துல்யமாயிருக்குமாகில்; ஜந்மாதிகளிலே தான் அகப்பட்டுக் கிடக்கச்செய்தே அந்யோந்யம் விவாதம் பண்ணி முடிந்து போவதே என்று வெறுக்கிறார். ஒரு விடக்கைப் பற்றி இரண்டு பதார்த்தம் விவாதம் பண்ணுமாபோலே, அத்யந்தஹீநமாய் இருவர்க்கும் பாத்தம் போராத விஷயங்களைப் பற்றி ஸ்பர்த்தை பண்ணித் திரிவதே. (அந்தோ) –

ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதி ஸ்ப்ருஹாவிஷயமான ஆத்மவஸ்து இப்படி படுவதே என்று தர்மஹாநி கண்டால் "படுகுலை, படுகுலை" என்பாரோபாதி வெறுக்கிறார். ப்ராப்தமுமாய், ஸுலபமுமாய், ஸுசீலமுமான இவ்விஷயத்தை விட்டு, அப்ராப்தமுமாய், துர்லபமுமாய், துச்சீலமுமான விஷயங்களைப் பற்றி க்லேசிக்கக் கண்டால், தார்மிகரான இவர்களுக்குப் பொறுக்கப்போமோ?

விளக்கம் - (அந்தோ பிறவியுள் பிணங்குமாறே) – அடைவதற்கு மிகவும் எளியதாக உள்ள இந்த விஷயத்தைக் கைவிட்டு, வேறு ஒரு விஷயத்தின் பின்னே சென்றாலும், அந்த விஷயம் இதனைவிடத் தாழ்வாக அல்லவோ உள்ளது? பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியில் உழன்றபடி, ஒருவருடன் வீண் விவாதம் செய்தபடி, பிறப்பு முடிந்து விடுகிறதே என்று வெறுத்துப் பேசுகிறார். இந்த உலகில் இருவர் உலக விஷயங்களைக் குறித்து, எந்தப் பலனும் இன்றி விவாதம் செய்வது என்பது, பிணத்தைப் பற்றிய இரண்டு கழுகுகள் அடித்துக் கொள்வது போன்று மிகவும் அற்பமானது என்றார். (அந்தோ) – "ஸர்வேச்வரன் தனது கௌஸ்துப மணியைக் கண்டு எத்தனை ஆசை கொள்வானோ, அது போன்று அவனால் ஆசைப்படத்தக்கதாக இந்த ஆத்மா உள்ளது. ஆயினும் இது இவ்விதம் உலக விஷயங்களில் ஈடுபட்டு அழிகின்றதே", என்று வெறுக்கிறார். அதர்மம் நிகழ்வதைக் கண்டு பலரும் கூச்சல் இடுவதைப் போன்று இவரும் செய்கிறார். ஜீவாத்மாவால் அடையத்தகுந்தது, அடைவதற்கு சுலபமாக உள்ளது, சிறப்பாக உள்ளது – இப்படி உள்ள வஸ்துவை விடுத்து – அடைவதற்கு ஏற்றதாக இல்லாததும், அடைவதற்குக் கடினமாக உள்ளதும், தாழ்வானதும் ஆகிய உலக விஷயங்களைக் கைப்பிடித்து, அதனால் துன்பம் அடைகின்றனர். இதனைக் கண்டால், தர்மத்தின் வழி நிற்கும் ஆழ்வார்களால் பொறுத்துக் கொள்ள இயலுமோ?

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

எம்பெருமானார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

எம்பெருமானாரின் திருநக்ஷத்ரம் சித்திரை மாதம் திருவாதிரை (09.05.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்னும் நூலில் இருந்து எம்பெருமானார் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்ட்டாபந ஆசார்ய உபயவேதாந்த ஆசார்ய தர்சந ஸ்தாபந ஆசார்ய பரமஹம்ஸ பரிவராஜக ஆசார்ய உபயவிபூதி நாயகரான எம்பெருமானார்க்குத் திருவவதார ஸ்தலம் தொண்டை மண்டலத்தில் பெருமாள் கோயிலுக்கு ஈசான பாகத்தில் இருக்கிற ஸ்ரீபெரும்பூதூர். திருநக்ஷத்ரம் கலியுகம் சகாப்தம் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பதுக்கு மேல் பிங்கள வருஷம் சித்திரை மாஸம் பதின்மூன்றாம் தேதி வியாழக்கிழமை பூர்வபக்ஷத்தில் பஞ்சமி திருநக்ஷத்ரம் திருவாதிரை ஆயுஷ்மாந் நாமயோகம் பத்ரகரணம் கர்க்கடகலக்னம்.

யதாவதாராந் மதுரா முராரே:
ராமஸ்ய ஸாகேதபுரீ ச யத்வத்
ததா யதீந்த்ரஸ்ய க்ருபாச்ரயஸ்ய
புண்யோத்தரா பூதபுரீ பபூவ

பொருள் – கண்ணனின் திருஅவதாரத்தால் மதுரா எவ்விதம் புண்ணிய நகரம் ஆயிற்றோ, இராமனின் திருஅவதாரத்தால் அயோத்தி எவ்விதம் புண்ணிய நகரம் ஆயிற்றோ, அது போன்றே கருணையின் இருப்பிடமான யதிராஜரின் திருஅவதாரத்தால் ஸ்ரீபெரும்பூதூர் புண்ணிய நகரம் ஆயிற்று.

என்கிற ச்லோகார்த்த விவரணமான திவ்யாவதாரம். சேஷாம்சம். திருத்தகப்பனார் ஸர்வக்ரது கேசவதீக்ஷிதர். திருத்தாயார் காந்திமதி அம்மையார். திருத்தமக்கையார் நாச்சியாரம்மன். குடி ஆஸூரி. குலம் வடமாள். ஹாரீத கோத்ரம். யஜுச்சாகை. ஆபஸ்தம்ப ஸூத்ரம். ஜாதகர்ம நாமகரண சௌளோபநயனாதி ஸத்கர்மங்களும் வேதாத்யயந நித்யானுஸந்தானங்களும் ஸாதித்தருளினார் திருத்தகப்பனார். சாத்தின திருநாமம் இளையாழ்வார். இவர்க்கு சாஸ்த்ரங்கள் விண்ணப்பஞ்செய்தவர் யாதவப்ரகாசர். அப்போதிவர் ஊமைக்கும் ப்ரஹ்மராக்ஷஸ்ஸுக்கும் மோக்ஷம் ஸாதித்தருளினார். இவர்க்கு ஹிதப்ரவர்த்தகர் திருக்கச்சி நம்பி. கைங்கர்யம் ப்ரதிதினமும் தேவப்பெருமாளுக்குத் திருமஞ்சனம். மதுராந்தகத்திலே சக்ரவர்த்தித் திருமகனார் ஸந்நிதியில் இவர்க்குப் பெரியநம்பி – தாப புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகச்ச பஞ்சம: அமீ பரமஸம்ஸ்காரா:

பரமைகாந்த்யஹேதவ: (பொருள் – சங்கு சக்ரம் தரித்தல் என்னும் ஸம்ஸ்காரம், ஊர்த்வபுண்ட்ரம் தரித்தல், தாஸ்ய நாமம் ஏற்றல், திருமந்த்ர உபதேசம் பெறுதல், திருவாராதனம் என்னும் ஐந்தும் உயர்ந்த பரமைகாந்தி நிலையை உண்டாக்க வல்லன) – என்கிற ச்லோகார்த்த விவரணமான சக்ராங்கநமும், திருமண் ஸ்ரீசூர்ணங்களும் ராமாநுஜனென்கிற தாஸ்ய நாமமும், ஸ்ரீஅஷ்டாக்ஷரீ மஹாமந்த்ரமும், த்வயசரம ச்லோகங்களும், மந்த்ரபரதிபாத்யனான பேரருளாளப் பெருமாளையும் ஸாதித்தருளி, அநந்தரம் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி, திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெரியாழ்வார் திருமொழி முதலான ஈராயிரமும் ஸாதித்தருளினார். ததநந்தரம் இவர் திருவனந்த ஸரஸ்ஸு தீரத்தில் பேரருளாளர் ஸந்நிதியிலே சதுர்த்தாச்ரம ஸ்வீகாரம் பண்ணியருளினார். அப்போது இவருக்கு தேவப்பெருமாள் யதிராஜரென்னும் திருநாமஞ்சாத்தியருளினார். தத்ஸமயத்திலே பாகிநேயரான தாசரதியும் ஸகோத்ரரான கூரத்தாழ்வானும் வந்து இவரை ஆச்ரயித்தார்கள். பின்பு யாதவப்ரகாசரும் வந்து ஆச்ரயித்தார். அவருக்கு தாஸ்யநாமம் கோவிந்த்தாஸரென்று திருநாமம் சாத்தியருளினார்.

நம்பெருமாள் உபயவிபூதிகளுக்கும் யதிராஜரைப் பட்டங்கட்டி உடையவரென்று திருநாமம் சாத்தியருளினார். இவர்க்குத் திருவரங்கப்பெருமாளரையர், பெரிய திருமொழியும், திருவாய்மொழியும் மூலம் கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம் ஸாதித்தருளி மஞ்சள் காப்பு கைங்கர்யத்துக்கு திருவுள்ளமுகந்து, த்வயார்த்தம் ஸாதித்தருளி லக்ஷ்மணமுனி என்கிற திருநாமமும் சாத்தித் தம்முடைய திருத்தம்பியாரான சொட்டை நம்பியை இவர் திருவடிகளில் ஆச்ரயிப்பித்தருளினார். பெரிய நம்பி தம்முடைய குமாரரான புண்டரீகாக்ஷரை இவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். திருக்கோட்டியூர் நம்பி திருமந்த்ரார்த்தமும், எம்பெருமானார் என்கிற திருநாமமும், சரம ச்லோகார்த்தமும் ஸாதித்தருளி, தம்முடைய குமாரரான தெற்காழ்வானை இவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். திருமாலையாண்டான், பெரிய திருமொழி, திருவாய்மொழி முதலான நாலாயிரத்துக்கும் வ்யாக்யானங்கள் ஸாதித்தருளி, சடகோபன் பொன்னடி என்கிற திருநாமம் சாத்தி, தம்முடைய குமாரரான சுந்தரத்தோளுடையாரை இவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். பெரியதிருமலைநம்பி, ஸ்ரீமத் ராமாயண வ்யாக்யானம் ஸாதித்தருளி, கோயிலண்ணனென்கிற திருநாமம் சாத்தி, தம்முடைய குமாரரான பிள்ளை திருமலை நம்பியையும், மருமக்களான எம்பாரையும் கோவிந்தப்பெருமாளையும் இவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். ஆகையாலே எம்பெருமானார்க்கு ஆசார்யர் ஐவர். ஸ்ரீபாஷ்யமருளிச் செய்கையாலே ஸ்ரீபாஷ்யகாரரென்று சாரதை திருநாமம் சாத்தினாள். ஆதிகேசவப் பெருமாள் சாத்தின திருநாமம் பூதபுரீசர். திருவேங்கடமுடையான் சாத்தின திருநாமம் தேசிகேந்த்ரர். ஆக இவர்க்குத் திருநாமங்கள் பதினொன்று. அவை இளையாழ்வார், ராமாநுசர், யதிராஜர், உடையவர், லக்ஷ்மணமுனி, எம்பெருமானார், சடகோபன் பொன்னடி,

கோயிலண்ணன், ஶ்ரீபாஷ்யகாரர், பூதபுரீசர், தேசிகேந்த்ரர் என்பனவாம். பின்னும் விசேஷ திருநாமங்கள் யதீந்த்ரர், யதிகுலதுர்யர், யதிஸார்வபௌமர், யதிசக்ரவர்த்தி, யதிபதி, யதிநாதர், யோகீந்த்ரர், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர். இவர் செய்தருளின க்ரந்தங்கள் ஶ்ரீபாஷ்யம், வேதாந்தஸாரம், வேதாந்ததீபம், வேதார்த்தஸங்க்ரஹம், கத்யத்ரயம், உடையவர் நித்யம், கீதா பாஷ்யம். இவரே யஜ்ஞமூர்த்தி முதலான மாயாவாதிகளை ஜயித்து திக்விஜயார்த்தமாக பூப்ரதக்ஷிணம் பண்ணினார். திருவேங்கடமுடையானுக்கு வக்ஷ:ஸ்தலத்தில் அலர்மேல் மங்கை நாச்சியாரை எழுந்தருளப்பண்ணி, திருவாழி திருச்சங்கங்களும் சாதித்தருளினார்; ஆகையாலே திருவேங்கடமுடையானுக்கு மாமனரும் ஆசார்யருமானார். திருக்குறுங்குடி நம்பிக்கு த்வயோபதேசம் பண்ணி, ராமாநுஜநம்பி என்று தாஸ்யநாமம் சாதித்தருளினார். ஆகையாலே அவருக்கும் ஆசார்யரானார். ஸுல்தான் க்ருஹத்திலே எழுந்தருளியிருந்த செல்லப்பிள்ளையை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து திருநாராயணஸ்வாமி சேர்த்தியிலே எழுந்தருளப்பண்ணி, தாமங்கே அர்ச்சாவதாரமாய் நின்றார். லோகோபகாரார்த்தமாக ஸாளக்ராமத்திலே வடுகநம்பிக்குத் திருவடிகளும் ஶ்ரீபாததீர்த்தமும் ஸாதித்தருளினார். இப்படி ஸர்வரக்ஷகரான பெருமாள்களுக்கும் அவர்களுக்குத் திருவுள்ளமான கைங்கர்யங்களும் செய்தருளிப் பரமதநிரஸனம் ஸ்வமதஸ்தாபனம் பண்ணுகையாலே இவர் திருநாமத்திலே தர்சனம் விளங்கிற்று. இவர் திருவடிகளிலே ஆச்ரயித்த முதலிகள்

ஏகாந்திபிர் த்வாதசபிஸ் ஸஹஸ்ரை:
பீடைச்சதுஸ்ஸப்ததிபிஸ் ஸமேத:
அந்யைரநந்தைரபி விஷ்ணுபக்தை:
ஶ்ரீரங்க ஆஸ்தே யதிஸார்வபௌம:

பொருள் – (ப்ரபந்நாம்ருதம் 33-14) எழுநூறு யதிகள், எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகள், எண்ணற்ற அடியார்கள் ஆகியவர்களால் வணங்கியபடி யதிராஜர் திருவரங்கத்திலே எழுந்தருளியுள்ளார்.

என்று சொல்லுகிறபடியே ஏகாந்திகள் பன்னீராயிரவரும் ஸிம்ஹாஸனஸ்தரான ஆசார்ய புருஷர் எழுபத்து நால்வரும், ஜீயாள் எழுநூறு பேரும், சாத்தின கொத்தம்மையார்களும், சாத்தாத கொத்தியம்மையார்களும், சாத்தின முதலிகளும், பிள்ளையுறங்கா வில்லிதாஸர் முதலான திருநாமதாரிகளும், பொன்னாச்சியார் முதலான திருநாமதாரி ஸ்திரீகளும் அஸங்க்யேயர்.

அதில் ப்ரதான சிஷ்யர் முதலியாண்டான், கந்தாடையாண்டான், மாருதிப் பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான், ஈச்வராண்டான், ஜீயராண்டான், ஆண்டுகொண்டான், ஆள்கொண்டான், ஈயுண்ணியாண்டான்,

சேட்டலூராழ்வான், ஸோமாசியாண்டான், கூரத்தாழ்வான், தெற்காழ்வான், நெய்யுண்டாழ்வான், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான், மிளகாழ்வான், அநந்தாழ்வான், கோமடத்தாழ்வான், வேதாந்தியாழ்வான், மாடபூசையாழ்வான், அம்மங்கியாண்டான், கிடாம்பியாழ்வான், உக்கலாழ்வான், அரணபுரத்தாழ்வான், உருப்புட்டூராழ்வான், சொட்டைநம்பி, பிள்ளைதிருமலைநம்பி, தொண்டனூர்நம்பி, மருதூர் நம்பி, மழவூர்நம்பி, திருகுறுங்குடிநம்பி, முடும்பைநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, ஸ்ரீவில்லிபுத்தூர்நம்பி, வடுகநம்பி, வங்கிபுரத்துநம்பி, புண்டரீகாக்ஷர், ஸ்ரீபராங்குசபட்டர், சிறுப்பள்ளி தேவராஜபட்டர், ஸ்ரீகோவிந்தபட்டர், நம்பியூரில் ஸ்ரீரங்கராஜபட்டர், உள்ளூரில் பெரியபெருமாள் பட்டர், வரந்தரும் பெருமாள்பட்டர், எம்பார், சிறியகோவிந்தப்பெருமாள், சுந்தரத் தோளுடையார், திருக்குருகைப்பிரான் பிள்ளான், ஆர்க்காட்டுப் பிள்ளான், ராமானுஜம்பிள்ளான், திருமலை நல்லான், வங்கிபுரத்தாச்சான், கோமண்டூராச்சான், கிடாம்பியாச்சான், கொங்கிலாச்சான், ஈசம்பட்டியாச்சான், கணியனூர் சிறியாச்சான், மஞ்சப்பூர் சிறியாச்சான், என்னாச்சான், எச்சான், ஆஸூரி ஆதிகேசவப் பெருமாள், கிடாம்பிப் பெருமாள், மஹாமுனிப் பெருமாள், அம்மங்கிப் பெருமாள், பிள்ளை திருநறையூரரையர், பிள்ளை ராஜமஹேந்த்ரப்பெருமாளரையர், பிள்ளை திருநாராயணபுரத்தரையர், பிள்ளை திருக்குறுங்குடியரையர், பிள்ளை திருவாய்மொழியரையர், திருவரங்கப் பெருமாளரையர், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர், ராஜநாராயணப் பெருமாளரையர், திருமாலிஞ்சோலையரையர், திருக்கண்ணபுரத்தரையர், திருவரங்கத்தமுதனார், ஈயுண்ணிப்பிள்ளை, கோமண்டூர்ப்பிள்ளை, தேவராஜப்பிள்ளை, தோழப்பர்பிள்ளை, ஸ்ரீஸாலக்ராமையர், பெரியையர், சிறியய்யர், ஏறுதிருநீதியப்பன், தந்தையப்பன், மணல்பாக்கமப்பன் ஆகிய இத்தனை பேரும் ஆசார்ய புருஷர்கள். அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஜீயர், திருவெள்ளறை ஜீயர், ஈச்சம்பாடி ஜீயர், ஆள்கொண்டவில்லி ஜீயர், ஸ்ரீகோவிந்த ஜீயர், குன்றத்தூர் ஜீயர், நம்பெருமாள் கோயில் ஜீயர் இவர்கள் முதலான ஜீயர்கள் எழுநூறு பேர்கள். திருமஞ்சனமெடுக்கும் துய்யமுனிவேழம், ஸ்ரீபண்டாரம் காக்கும் திருவரங்கமாளிகையார், ஆண்டவர், அரியவர், ஆண்டவென்மாயவர், வைத்தமாநிதி, ஆதியார்பிள்ளை, நம்பெருமாள் திருமேனி காக்கும் சடகோபன், ராமாநுஜர் திருமேனி காக்கும் பராங்குசர், திருப்பதிகளில் ஸ்ரீகார்யங்கள் பண்ணும் ஏகாந்திகள் முதலானவர்கள் பன்னீராயிரம். காராஞ்சி சோமயாஜியார், அணியரங்கத்தமுதனார், அலங்காரர், திருவேங்கடவர், நம்பி குறுந்தேவர், ஸ்ரீதரபண்டிதர், நத்தத்தில் முதலிகள் மூவர், அழகியமணவாளப் பெருமாள் தாஸர், திருவேங்கட தாஸர், பேரருளாள தாஸர், பாண்டிய நாட்டில் முதலிகள் மூவர், நம்பி கருந்தேவர், மகிழலங்கார தாஸர், ஸ்ரீபராங்குச தாஸர், பெரியகோயில் வள்ளலார், நத்தத்து முதலிகள் மூவர், யதிவரதாஸர், யதிராஜ தாஸர், ராமாநுஜ தாஸர், பருத்திக் கொத்தையம்மாரையங்கார் முதலான ஸ்ரீவைஷ்ணவர்கள் அஸங்க்யர். குருகைநம்பி தாஸர், குலசேகர தாஸர், பட்டர் பிரான் தாஸர், நாராயண தாஸர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாஸர், பகவல்லி தாஸர், ஸ்ரீகோவர்த்தன தாஸர், திருவழுதிவளநாட்டு தாஸர் முதலான சாத்தாத வைஷ்ணவர்கள் அஸங்க்யர்.

பிள்ளையுறங்காவில்லி தாஸர், வண்டர், சுண்டர், பிள்ளையுறந்தையுடையார், பிள்ளை ராமாநுஜ வேளக்காரர், ஜகந்நாத ப்ரஹ்மராயர், ஸேனாநாத ப்ரஹ்மராயர், தொண்டைமான் சக்ரவர்த்தி முதலான திருநாமதாரிகள் அஸங்க்யேயர். உக்கலம்மாள், பருத்திக்கொல்லையம்மாள், அம்மங்கியம்மாள், கோமடத்தம்மாள், கோமாண்டூரிளையவல்லி, திருவனந்தபுரத்தம்மை, திருவண்பரிசாரத் தம்மை, திருவட்டாற்றம்மை, மன்னார்கோயில் பொரத்தம்மை, திருப்பதியில் ஸ்ரீகார்யம், ஆரியூரம்மை, நாயகத்தேவியார், சிறியபெருந்தேவியார், பெரிய பெருந்தேவியார், திரிபுரா தேவியார், கொங்கிற் பெரியபிராட்டியார், ஸ்ரீபெரும்பூதூரம்மை, திருவரங்கத்தம்மை, திருக்கோட்டியூராண்டாள், கூரத்தாண்டாள், தேவகிப் பிராட்டியார், அத்துழாய், அம்மங்கி, இன்னிளவஞ்சியார், ஆசூரியம்மாள், சூடிக்கொடுத்தாள், பொன்னாச்சியார் இவர்கள் முதலான அம்மையார்கள் அஸங்க்யேயர்.

இவர்களில் வைத்துக்கொண்டு எம்பெருமானாருக்கு அந்தரங்க சிஷ்யர் கூரத்தாழ்வான், முதலியாண்டான், கந்தாடையாண்டான், எம்பார், வங்கிபுரத்து நம்பி, வடுகநம்பி, திருவரங்கத்தமுதனார், திருக்குருகைப் பிரான்பிள்ளான், ஆள்கொண்ட வில்லிஜீயர், அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஜீயர், புண்டரீகாக்ஷர், தெற்காழ்வான், சுந்தரத்தோளுடையார், சொட்டைநம்பி, பிள்ளை திருமலை நம்பி, திருமலை நல்லான், பிள்ளை திருநறையூரரையர், ஐயங்கார், குருகைநம்பி தாஸர், அநந்தாழ்வான், பிள்ளையுறங்கா வில்லிதாஸர், அத்துழாயம்மன், கூரத்தாண்டாள், திருக்கோட்டியூ ராண்டாள், தேவகிப் பிராட்டியார், பருத்திக் கொல்லையம்மாள், கொங்கில் பெரிய பிராட்டியார், திருநறையூரம்மை, அம்மங்கி அம்மாள், பொன்னாச்சியார். இவர்களில் எம்பெருமானார்க்கு ஆண்டானும், ஆழ்வானும் தண்டபவித்ரங்களாயிருப்பார்கள். கந்தாடையாண்டான், எம்பார், வங்கிபுரத்து நம்பி, வடுகநம்பி, அருளாளப் பெருமாளெம்பெருமானார் ஜீயர் இவர்களைவரும் பஞ்சரத்னங்களாயிருப்பார்கள். திருவரங்கத்தமுதனார், திருக்குருகைப் பிரான்பிள்ளான், புண்டரீகாக்ஷர், தெற்காழ்வார், சுந்தரத்தோளுடையான், திருமலை நல்லான், ஆள்கொண்ட வில்லிஜீயர், பிள்ளையுறங்கா வில்லிதாஸர் ஆகிய இவரொன்பது திருநாமமும் நவரத்னங்களாயிருப்பார்கள். இனி அம்மங்கார்களில் நவரத்னங்கள் - அத்துழாயம்மன், தேவகிப் பிராட்டியார், திருக்கோட்டியூராண்டாள், கூரத்தாண்டாள், அம்மங்கி அம்மாள், பருத்திக் கொல்லை யம்மாள், கொங்கில் பிராட்டியார், திருநறையூரம்மை, பொன்னாச்சியார். இவர்களில் மிகவும் அத்யந்தாந்தரங்கர்கள் கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், வங்கிபுரத்து நம்பி, வடுகநம்பி, அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஜீயர். இவர்களுக்குக் கைங்கர்யம் – கூரத்தாழ்வானுக்கு ஸ்ரீகோசபண்டாரம், உக்ராணமடம், ஸர்வாத்யக்ஷ பானுபத்யம். முதலியாண்டானுக்குக் கைங்கர்யம் திருமண்காப்பும், திருவாராதனைக்குப் பரிசாரகமும், திருவடிநிலைகள் ஸமர்ப்பிக்கவும். எம்பாருக்குக் கைங்கர்யங்கள் திருமேனி வட்டில்கள் பிடிக்கவும்,

எண்ணெய்க்காப்பு சாத்தவும், திருப்பரியவட்டங்கள் திருத்தவும், திருக்கை ஸமர்ப்பிக்கவும், திருப்படுக்கை சோதிக்கவும், திருமேனி காவல் முதலான கைங்கர்யங்கள். அருளாளப்பெருமாளெம்பெருமானாருக்குக் கைங்கர்யம் திருவாராதனம். வங்கிபுரத்து நம்பிக்குக் கைங்கர்யம் தளிகை பண்ணவும், வடுகநம்பிக்குக் கைங்கர்யம் பாலமுது திருத்தி ஸமர்ப்பிக்கவும், திருமேனி காவலும். இப்படி எல்லாருக்கும் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை நியமித்துக் கொண்டு எம்பெருமானார் ஜகதாசார்யராய் யதிஸார்வ பௌமராய், நம்பெருமாள் கோயிலிலே நூற்றிருப(த்தைந்)து திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்தார். இவர்க்குத் தீரத்ததிவஸம் துர்மதி வருஷம் மாசி மாஸத்தில் சுக்லபக்ஷத்தில் தசமி.

தனியன்

யோ நித்யம் அச்யுத பத அம்போஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைகசிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

பொருள் – யார் ஒருவர் - அச்சுதனின் திருவடித் தாமரைகளை பொன் என்று போற்றி, அவை மீது கொண்ட பேராசை காரணமாக மற்ற பொருள்கள் அனைத்தையும் புல் போன்று எண்ணினாரோ; எனது ஆசார்யராய் உள்ளாரோ; அனைத்து ஞானமும் குணங்களும் பரிபூர்ணமாக நிரம்பியவராக உள்ளாரோ; கருணைக்கடலாக உள்ளாரோ – அப்படிப்பட்ட ராமாநுஜரின் திருவடிகளைச் சரணம் அடைகிறேன்.

திருவரங்கத் திவ்யதம்பதிகளைத் தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:

முதலியாண்டான் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

முதலியாண்டானின் திருநக்ஷத்ரம் சித்திரை மாதம் அவிட்டம் (10.05.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்னும் நூலில் இருந்து முதலியாண்டான் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

பரதாம்சபூதரான முதலியாண்டானுக்கு திருவவதார ஸ்தலம் தொண்டைமண்டலத்தில் பெருமாள் கோயிலுக்குப் பூர்வபாகத்தில் ஸ்ரீபுருஷமங்கலம். திருநக்ஷத்ரம் ப்ரபவ வருஷம் மாசிமாஸம் இருபத்தஞ்சாந்தேதி க்ருஷ்ண பக்ஷத்தில் தசமி வியாழக்கிழமை புனர்பூசம் (குறிப்பு: ஆனால் நடைமுறையில் இவரது திருநக்ஷத்ரம் சித்திரை மாதம் அவிட்டம் என்றே கொண்டாடப்படுகிறது). ஸௌபாக்ய நாமயோகம் கரஜாகரணம் கும்பலக்னம். திருத்தகப்பனார் ஆநந்த்தீக்ஷிதர். திருத்தாயார் நாச்சியாரம்மன். குலம் வடமாள். வாதூலகோத்ரம் யஜுச்சாகை ஆபஸ்தம்ப ஸூத்ரம். திருநாமங்கள் தாசரதி, ராமாநுஜன் பொன்னடி, ஸ்ரீவைஷ்ணவதாசர், திருமறுமார்பன், முதலியாண்டான். குமாரர் கந்தாடையாண்டான். ஆசார்யர் எம்பெருமானார். இவருக்கு வேதசாஸ்த்ர ப்ரபந்த ரஹஸ்யம், ஸ்ரீபாஷ்யாதி ஸகல ரஹஸ்யார்த்தங்களும் ஸாதித்தருளினவர் எம்பெருமானார். திருவாராதனம் அழகியசிங்கர். இருப்பிடம் கோயில். ப்ரபந்தங்கள் அருளிச்செய்தருளினவர் திருத்தகப்பனார். இவர் எம்பெருமானாருக்குத் திருமரு மகனாராய், திருவடிகளுமாய், த்ரிதண்டமுமாயிருப்பார். இவர் மந்த்ரார்த்தத்துக்காக அத்துழாயம்மன் திருமாளிகையிலே ஸகவித கைங்கர்யங்களும் செய்தருளினார். இவர் அருளிச்செய்தருளின ப்ரபந்தம் ரஹஸ்யத்ரயம். இவர் கந்தாடை திருவம்சத்துக்கெல்லாம் கூடஸ்தர். இவர் நூற்றைந்து திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

தனியன்

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா
தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாமயஹம்

பொருள் – யதிராஜரின் பாதுகைகள் யாருடைய திருநாமத்தால் முதலியாண்டான் என்று போற்றப்படுகிறதோ, அந்த தாசரதி என்னும் திருநாமம் கொண்டவரின் திருவடிகளை எனது தலையால் ஏற்கிறேன்.

நம் ராமாநுஜனின் திருவடிகளைத் தஞ்சமடைந்த முதலியாண்டான் திருவடிகளே தஞ்சம்